**தீபகத்திலிருந்து...**

**இறையாசீர்**

அன்பிற்கினியவர்களே, அன்னையின் திருசெபமாலையை கொண்டாடும் மாதத்திலே நாம் அடியெடுத்து வைக்கிறோம். நமது கிறிஸ்தவ வாழ்வின் ஆதாரம் கிறிஸ்துவின் வருகை, அவரது வாழ்வு, இறப்பு மற்றும் உயிர்ப்பு என்னும் மறைப்பொருளே ஆகும். இம்மறைப்பொருளை மிக அழகாக சுருக்கமாக நான்கு மறையுண்மைகளில் சிந்திக்க உதவும் செபமாலை, உண்மையிலேயே திருத்தந்தை 5ம் பத்திநாதர் கூறிவதுபோல "நற்செய்திகளின் சாரம்" தான். செபமாலை செபிப்பது என்பது கத்தோலிக்கர்களாகிய நமக்கு அரும்பெரும் கொடையாகும். அதன் மூலமாக ஒவ்வொரு நாளும் நாம் இறைவனின் மீட்புத்திட்டத்தை, அவரது இரக்கத்தை தியானிக்கவும் மகிழ்ந்து கொண்டாடவும் ஏதுவாகின்றது. இவ்வருங்கொடையை கொண்டாடும் இம்மாதத்திலே இறைஇரக்கத்தின் முன்மாதிரியாக நமக்குத்தரப்படும் புனிதர் திருத்தந்தை தூய 23ம் யோவான்.

**இறைஇரக்கத்தின் முன்மாதிரியாக இவரை நாம் முன்னிறுத்த காரணங்கள்:**

1. வத்திக்கான் இரண்டாம் திருச்சங்கத்தை கூட்டியவர் இவரே. அதன் முடிவின் பொன்விழா. (08.12.2015) அன்றுதான் இறைஇரக்கத்தின் ஆண்டு தொடங்கியது.
2. மிகுந்த இரக்கமும் அன்பும் தந்தைக்குரிய பாசமும் கொண்ட ஆயராக, திருத்தந்தையாக 23ம் யோவான் எப்போதுமே அறியப்பட்டவர்.
3. உழைக்கும் மக்கள், ஏழைகள், எளியவர்கள் ஆகியோரின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டவராக இருந்த இவர் தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு பெரும் உந்துதலாய் இருந்தவர். திருத்தந்தையானபோது 24ம் யோவான் என்ற பெயரை எடுக்கலாமா என்றுக்கூட தான் எண்ணியதாகவும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார்.

இவ்வாறு தன் வாழ்விலும் தனது படிப்பினைகளிலும் ஏழைகள், எளியவர்கள், உழைக்கும் மக்கள் ஆகியோரின் நண்பராய் இருந்து திருச்சபையின் மாபெரும் புதுப்பித்தலுக்கு வழிவகுத்த திருத்தந்தை தூய 23ம் யோவானை எண்ணி இறைவனைப் போற்றுவோம்.

**இம்மாதத்திற்கான இறைஇரக்கத்தின் செயல்பாடு:**

இம்மாதம் முழுவதும் எங்கெல்லாம் உழைக்கும் மக்களை (ஓட்டுநர்கள், சிறு வியாபாரிகள், கடைகளில் பணிபுரிவோர்) சந்திக்கிறோமோ அவர்களோடு மரியாதையோடும், மாண்போடும், அன்போடும் உரையாட முடிவெடுப்போம்.

அன்புடன்

பணி. அந்தோணி கிறிஸ்டி சச.

## பகுதி - 1 வழிபாட்டு வழிக்காட்டி

**01.10.2016 குழந்தை இயேசுவின் தூய தெரேசா** **திருப்பலி**

திரு. DVR. ராஜா

**முன்னுரை**

இன்று திருச்சபை குழந்தை இயேசுவின் புனித தெரேசாவின் திருவிழாவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. இவர் மிகவும் எளிமையான குடும்பத்தில் பிறந்து எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர். தனது குடும்பத்தில் 9வதாகப் பிறந்த கடைப்பிள்ளை. சிறு வயதிலிருந்தே இயேசுவின்மீது அளவிடற்கரிய அன்பும், விசுவாசத்தின் நிமித்தம் கார்மேல் மடத்தில் சேர்ந்தவர். அதீத பக்தி, ஒழுக்கம், ஒறுத்தல், தியாகம் போன்ற நற்பண்புகளை உடையவர். கீழ்ப்படிதலின் மாதிரியாய் திகழ்ந்து சிறிய வழியை போதித்தவர். குருக்களுக்கும், துறவறத்தாருக்கும் ஒறுத்தல்கள் மேற்கொண்டு ஓயாமல் செபிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டவர். சிறுமலர் என்ற பெயர் பெற்ற தூய குழந்தை தெரேசாள் தமது 24ம் வயதில் நோயுற்று “இறைவா உம்மை அன்பு செய்கிறேன்” என்று கூறி உயிர் நீத்தார். இந்த தன்னிகரற்ற புனிதை ஓர் ஆன்மாவின் வரலாறு என்னும் நூலில் தனது சுய சரிதையை வடித்துள்ளார். இவர் விசுவாசப் பரப்புதல் சபைக்கும், ரஷ்யாவுக்கும், விமானிகளுக்கும் பாதுகாவலராகத் திகழ்கிறார். இவரைப் போன்று நாமும் எல்லாச் சோதனைகளையும் கடந்து விசுவாசத்தில் நிலைத்து நின்று நிலைவாழ்வுக்கு தகுதியுள்ளவராய் விளங்கிட திருப்பலியில் வேண்டுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

**திருத்தந்தைக்காக:** திருச்சபையை வழி நடத்தும் எம் திருத்தந்தையை உமது அருள் வரங்களால் பொழிந்து உமக்கென அர்ப்பணிக்கப்பட்ட இவரை ஆற்றலோடு செயல்பட தேவையான உடல் வலிமையும் மனதிடமும் ஆரோக்கியமும் தந்து நெடுநாள் வாழும் வரமருளவும் தமது மந்தையை சிறந்த முறையில் நடத்திட தேவையான ஆலோசனையும் ஆசீரையும் அருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**குருக்களுக்காக:** உலகனைத்தும் மாயை, இறைவழியே நிறைவழி என உம்மை ஏற்று மறைப்பணி புரியும் ஒவ்வொரு குருக்களையும், கன்னியர்களையும், இறைப்பணியாளர்களையும் இறைவன்தாமே நிறைவாக ஆசீர்வதித்து, மக்களோடு ஒன்றினைந்து தோழமையோடு செயல்படவும், திருச்சபை புதுப்பொலிவோடு என்றுமே உயிரோட்டம் உள்ளதாய் விளங்கிடவும் சடங்கு சம்பிரதாயம் இவற்றைக் காட்டிலும் இறைவார்த்தைகளை விதையாய் ஒவ்வொருவருடைய மனங்களிலும் விதைத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலிந்தோருக்காக:** உலகிலுள்ள அனைத்துக்கும் உரிமையாளர்களாய் விளங்கும் உரிமை பேற்றினை அளித்திருந்தும் எண்ணற்றோர் வறுமையிலும், ஏழ்மையிலும் உழலும் நிலையை மாற்றி உமது அருட்கொடையும், ஆசீரும் பெறத்தடையாய் இருக்கும் காரியங்களை நீக்கி அவர்களும் இம்மண்ணில் இன்புற்று வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**ஆட்சியாளர்களுக்காக:** மக்களையாளும் உரிமையை பெற்ற ஆட்சியாளர்கள் சுயநலன் விடுத்து சேவை எண்ணத்தோடு செயல்படவும் மக்களின் தேவைகளை பூர்த்திச் செய்யவும், வாழ்வாதாரங்களைப் பெருக்கவும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படவும், அன்றாட வாழ்வை அச்சமின்றி வாழ நல்ல ஆலோசனையும் நிர்வாகத்திறனையும் இவர்களுக்கு அளித்து தங்களின் பணியினை செவ்வனேச் செய்திட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**02.10.2016 ஆண்டின் பொதுக்காலம் 27ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. ராணி வில்சன்

**முன்னுரை**

“அன்று இருக்கின்றவர் நாமே இன்று ஆண்டவர் உம்மோடு”

நம்பிக்கை வாழ்வின் வளர்ச்சியில் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. திமொத்தேயுவைப் பார்த்து தூய பவுல் அடிகளார் கூறுகிறார். நீ உன் அழைத்தலில் நம்பிக்கைக்கொள். துயரப்படுவோருக்கு நம்பிக்கை என்பதை தவிர மருந்து வேறொன்றுமில்லை. எனவே நாம் நம்முடைய தகுதிக்கும், தனித்தன்மைக்கும் ஏற்றவாறு பல நிலைகளில் அழைக்கப்பட்டுள்ளோம். ஒவ்வொரு முறை திருப்பலியிலும் மற்ற அருளடையாளங்களின் போதும் “ஆண்டவர் உம்மோடு இருப்பாராக” என்றுரைப்பதை உண்மையில் நம்புகிறோமா? எனது தனித்தன்மை என்ன? தகுதி என்ன? இந்த இறை அழைத்தலில் நான் நம்பிக்கையோடு நிலைத்திருக்கின்றேனா? நம் வாழ்வை நம்பிக்கை எனும் ஒளியால் பிரகாசமாக்கி

அதை பிறர் வாழ்விலும் மலரச் செய்வோம். அதற்காக இத்திருப்பலியில் திருத்தூதர்கள் கேட்டதுபோல "எங்கள் நம்பிக்கையை மிகுதியாக்கும்" என மன்றாடி செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. புனிதமே இறைவா, எங்கள் திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார்கள் மற்றும் இறைப்பணிப்புரியும் அனைவரும் புனிதர்களாய் மனதிடத்துடனும், மகிழ்வுடனும், எதையும் எதிர்நோக்கும் உறுதியுடனும் வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. போற்றுதற்குரிய இறைவா, எங்கள் அனைவரின் உடல் உள்ளம் ஆன்மா அனைத்தும் கிறிஸ்துவுக்காகவே என்பதை உணர்ந்து அவருக்காகவே அவராகவே நாங்கள் வாழ தேவையான அனைத்து வரங்களையும் அளித்து எங்களை காத்து வழிநடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அனைத்துமானவரே எம் இறைவா, நீர் ஆதாரமின்மையினால் எங்கள் தமிழக விவசாயம் பொய்த்து போய்விட்டது. விவசாயிகள் மிக வேதனையால் வாழ்வாதாரம் இன்றி உள்ளனர். பல நிலைகளில் உணவு பற்றாக்குறை, விலையேற்றம் போன்ற துன்பங்களில் சிக்கித் தவிக்கின்றனர். தமிழகத்திற்கு கேரளா, கர்நாடகா மாநிலங்கள் தண்ணீர் தந்து நீதியோடு நடந்திடவும், இந்தியர் என்ற சகோதர மனப்பான்மையோடு உறவுகொண்டு வாழவும், எம்நாடு செழித்தோங்கவும் நீர் உதவியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கமே நிறைந்த இறைவா, ஏழை மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள், முதியோர் அனைவரும் இன்று அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்காமல் மறுக்கப்பட்டு மத்திய மாநில அரசாலும், சமூகத்தாலும் ஓரங்கட்டப்பட்டு இன்னலுற்றுள்ளனர். அரசும், சமூகமும் அன்புள்ளத்தோடும், தொண்டுள்ளத்தோடும் இவர்களது தேவைகளை உரிமைகளை கொடுத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான வரங்களை பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**04.10.2016 தூய பிரான்சிஸ் அசிசியார் திருவிழா திருப்பலி**

திரு. பி. விக்டர்

**முன்னுரை**

தூய பிரான்சிஸ் அசிசியார், இத்தாலி நாட்டிலுள்ள அசிசி நகரில் 1181 (அல்லது 1182ல்) பியட்ரோ டி பெர்னார்டோன் என்ற மிகப்பெரிய பட்டுத்துணி வியாபாரிக்கும் டிகா டி பௌர்லமோன்ட் என்கிற பக்தியுள்ள தாய்க்கும் ஏழு குழந்தைகளில் ஒருவராகப் பிறந்தார். தன்னுடைய இளம் வயதில் தனது வசதிக்கேற்ப பணக்கார வாலிபர்களுடன் வாழ்க்கையை இன்பமாக அனுபவித்து வந்தார். பேரும் புகழும் கிடைக்க வேண்டும் என்பதற்காக இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினார். கி.பி. 1204ம் ஆண்டு அவருடைய உடல்நிலை வியாதியினால் பாதிப்படைந்தது. இந்நிலையில் அவரில் ஆன்மிகச் சிந்தனை தலைதூக்கியது. அருகிலுள்ள தமியோனோ ஆலயத்தில் சென்று செபிக்க ஆரம்பித்தார். அப்படி செபித்த வேளையில் இறைவனது குரலைக்கேட்டு ஆண்டவருக்குப் பணிபுரிய தன்னை ஒப்புக்கொடுத்தார். தந்தையின் கடும் எதிர்ப்பார்ப்பையும் மீறி தனது ஆன்மீக பயணத்தைத் தொடர்ந்தார்.

விலங்குகளிடமும் பறவைகளிடமும் அன்பு காட்டுகிறவராகவும் சுற்றுப்புற சூழலில் ஆர்வமுடையவராகவும் விளங்கினார். பறவைகளும், விலங்குகளும் இவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தன. கி.பி. 1223ல் இவர் அமைத்த கிறிஸ்மஸ் குடில் இயற்கையின்மீது இவர் கொண்டிருந்த ஈடுபாட்டை எடுத்தியம்புவதாக இருந்தது. இவர் துவங்கி வைத்த இந்த கிறிஸ்மஸ் குடில் இன்று உலகமெங்கும் பரவியுள்ளது.

ஆண்களுக்கான OFM என்கிற துறவற சபையையும் பெண்களுக்கான Order of St. Clare என்கிற துறவற சபையையும் பொதுநிலையருக்கான மூன்றாம் சபையையும் நிறுவி திருச்சபையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். வரலாற்றில் அதிகம் போற்றப்படுகின்ற புனிதர்களில் இவரும் ஒருவர் ஆவார். கி.பி. 1226ம் ஆண்டு அக்டோபர் 3ம் நாள், தனது 44வது வயதில் இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை 9ம் கிரகோரியார் அவர்கள் 1228ம் ஆண்டு ஜூலை 16ம் நாள் இவருக்கு புனிதர் பட்டத்தை வழங்கினார். இவரது திருவிழா அக்டோபர் 4ம் நாள் உலகமெங்கும் கொண்டாடப்படுகிறது. "அமைதியின் தூதனாய் என்னையே மாற்றுமே" என்கிற இவரது செபம் உலக பிரசித்தி பெற்றது. இவரது திருவிழாவினைச் சிறப்பிக்கும் நாம் இயற்கையின்மீது ஆர்வமுடையவராய் இவரைப்போல அமைதியின் தூதராய் செயல்பட வரம்வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் கலந்துக்கொள்வோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அமைதியின் ஊற்றே இறைவா, தூய பிரான்சிஸ் அசிசியாரின் விழாவினைக் கொண்டாடும் நாங்கள் அவரிடமிருந்து உயிர்களிடத்தில் அன்பையும் இயற்கையை நேசிக்கின்ற மனதையும் பெற்று அமைதியின் தூதுவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. எளியவரை அன்பு செய்யும் இறைவா, துறவற பண்புகள் கிறிஸ்தவ வாழ்வுக்கு உரியன என்று கூறி அதைத் தன் வாழ்வில் வாழ்ந்து காட்டிய தூய அசிசியாரைப்போல் நாங்களும் எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிநடத்தும் வார்த்தையே இறைவா, இயேசுவின் அன்புப் பணியைச் செய்யும் துறவிகள் எப்படி வாழவேண்டுமென்று சட்டங்கள் இயற்றி அவற்றைத் தன் வாழ்வில் வாழ்ந்து காட்டிய தூய அசிசியாரைப்போன்று உமக்காக பணிபுரியும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் யாவரும் சாட்சியுள்ள வாழ்வு வாழவும் மக்களை ஆன்மீகப் பாதையில் நடத்திச்செல்ல தேவையான வல்லமை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நன்மைகளின் ஊற்றே இறைவா, தூய அசிசியாரின் திருவிழாவினைக் கொண்டாடும் நாங்கள் இறைவனின் குரலைக் கேட்கிற மக்களாக, இறை இயேசுவின் சிலுவையை தியானிக்கின்ற மக்களாக நற்கருணையில் சக்தி பெறும் மக்களாக, இறைவனின் திட்டங்களுக்கு எங்களை விட்டுக்கொடுக்கும் மக்களாக மாற வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**07.10.2016 செபமாலை அன்னை விழா திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

இறைவனின் உரிமைக் குடிமக்களே, இதோ நமது தாய் திருச்சபை தூய செபமாலை மாதா திருவிழாவை உலகமெங்கும் கொண்டாடுகிறது. லூர்து நகரில் ஆறாம் காட்சியின்போது பாவிகளுக்காக செபமாலை செபிக்கும்படி அறிவுறுத்தினார். பாத்திமா அன்னை காட்சியளித்தபோது உலக அமைதிக்காகவும் ரஷியா மனம் திருந்தவும் செபமாலை செபிக்கும்படி வெளிப்படுத்தினார்.

1571ம் ஆண்டு அக்டோபர் 7ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று லெபாந்தோ போரில் துருக்கியர் தோற்கடிக்கப்பட்டது இந்த செபமாலையினால்தான். இப்போரில் தலைமைத் தாங்கிய திரு. டான் ஜூவன் "இம்மாபெரும் வெற்றிக்குக் காரணம் செபமாலை செபித்ததினால்தான்" என்று உறுதியுடன் கூறினார். திருத்தந்தை 5ம் பத்திநாதர் இந்நாளை வெற்றியின் அன்னை மரியாள் என்று பறைசாற்றினார் திருத்தந்தை 13ம் கிரகோரியார். இந்நாளை "செபமாலை மாதா திருவிழா என கொண்டாடப் பிரகடணப்படுத்தினார். செபமாலை செயத்தின் அடையாளம். சாத்தானின் தந்திரங்களை தகர்த்தெரியும், செபமாலை பாவங்களை செய்யாமல் தடுக்கும் செபமாலை, புண்ணியங்கள் பல பெற்று, புவியினில் நலமுடன் வாழ வைக்கும் செபமாலை. இத்திரு செபமாலையை தினந்தோறும் செபித்து தியானிக்கின்றவர்களாய் வாழ அருள்வேண்டி செபமாலை அன்னை வழியாக இத்திருப்பலியில் தந்தையாம் இறைவனிடம் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. என்றும் வாழும் தந்தையின் தெய்வத் திருமகனே, துயரப்படும் மக்கள் எங்கெல்லாம் தேவையில் ஏங்குகிறார்களோ, அங்கெல்லாம் திருச்சபை உதவிக்கரம் நீட்டி பொருளுதவி தந்து பசிப்பிணிப்போக்கும் மருத்துவராக செயல்பட்டு நீங்களே இவர்களுக்கு உணவு கொடுங்கள் என்ற இயேசுவின் சொற்படி நடக்கும் நல்ல மனதைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. நான் ஆண்டவரின் அடிமை எனக்கூறிய மரியாவின் தெய்வீக மகனே, ஆண்டவரே, பெற்றெடுத்த தாய்க்கு மிகப்பெரிய மகிமையைத் தந்து உலகை, அமைதியிலும், சமாதானத்திலும் வாழ்வதற்கு மக்களையெல்லாம் மரியாவின் மக்களாக்கி, இறைச்சித்தத்தை நிறைவேற்றும் வழியைக் காட்டி வாழ்வித்துக் கொண்டிருக்கும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்று உணர வைத்த இறைவனே, எங்கள் ஆண்டவரே, விசுவாசத்தில் நிலைத்து நின்று மரியாவைப்போல் வாழவும் நித்திய வாழ்வைத்தரும் ஆவிக்குரிய வழியில் செல்லவும், வாழ்வில் ஏற்படும் வறுமை, பிணி, கடன்தொல்லைகள் நீங்கவும், குடும்பங்களைக் காப்பாற்றி பாதுகாக்கவும், இளைய சமுதாயத்தை வழி நடத்தவும், நேர்மையான ஆட்சியாளர்களை உருவாக்கவும், வேலைவாய்ப்புகள் பெருகச் செய்யவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**09.10.2016 ஆண்டின் பொதுக்காலம் 28ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

இறையன்பில் வாழும் இனிய மக்களே, நம் தந்தையின் மாட்சிமையில் தேர்ந்துகொள்ளப்பட்டவர்களாகிய நாம் மீட்பையும் அதனுடன் இணைந்த என்றுமுள்ள மாட்சியையும் பெற்றுக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம். இன்றைய வாசகங்களும் இதையே வலியுறுத்துகின்றன. படைத்தலைவன் "நாமான்" இறைவாக்கினர், எலிசா கூறிய வார்த்தையில் நம்பிக்கை வைத்து அதன்படி நடந்ததால்தான் அவரது தொழுநோய் அவரை விட்டு நீங்கியது. குணமடைந்த பத்து தொழுநோயாளிகளில் சமாரியனாகிய ஒருவர் மட்டும் நோய் குணமடைந்ததைக் கண்டவுடன் திரும்பி வந்து இயேசுவிடம் நன்றி கூறியதால்தான் உடல் நலத்துடன் கூடிய மீட்பும் கிடைத்தது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இறந்து உயிர்பெற்று எழுந்தார் என்ற நற்செய்தியில் விசுவாசம் கொள்ளும்போது கடவுளின் மாட்சிமை நம்மை பற்றிக்கொள்கிறது. ஆகவே, கடவுளின் இரக்கத்தை உணர்ந்து நன்றியுணர்வோடு கடவுளைப் போற்றி புகழும்போது நமக்கு அவரின் மீட்பும் கிடைக்கிறது. "என்ன நேர்ந்தாலும் நன்றி துதி கூறி பணிவேன் என் இறைவா, உந்தன் திருவுளப்படி எமை நடத்தும்" என்ற சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. திருச்சபையின் நாயகனே இறைவா, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் காலத்தின் அறிகுறிகளை ஆய்ந்தறிந்து நற்செய்தியின் ஒளியில் அவற்றின் பொருளை எல்லா கால கட்டங்களிலும் விளக்கி உரைப்பது நம் திருச்சபையின் கடமை என உணர்ந்து செயல்பட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அமைதியின் நாயகனே இறைவா, நாட்டின் அமைதிக்கும், ஒருமைப்பாட்டிற்கும் ஊறு விளைவிக்கக் கூடிய பல அபாயகரமான செயல்கள், வன்முறைகள், செயலிழந்து போகவும், மக்கள் அனைவரும் அமைதியுடன் வாழவும் பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் நாயகனே இறைவா, வளரும் இளம் சமுதாயத்தினர் காலத்தின் கவர்ச்சிகரமான மாய வலைகளில் சிக்கி தன்னிலை இழந்து எதிர்காலத்தை வெறுமையாக்கிக் கொள்ளும் நிலை வராமல் நல்வாழ்வு வாழ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. நற்செய்தியின் நாயகனே இறைவா, எளியோருக்கு நற்செய்தியை அறிவிக்க வந்த நம் இயேசுவை போன்று, அவரின் போதனைகளை ஏற்றுக்கொண்டதால் நற்செய்திக்காக வேதசாட்சிகளாக மரித்த சீடர்களைப் போன்று, செயல்படாவிட்டாலும் தான் மேற்கொண்ட திருச்சபைக்காக நம்மால் முடிந்தளவு திருத்தொண்டு ஆற்றக்கூடிய உற்சாகமான மனதினை மனிதர்களுக்கு வழங்க வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**11.10.2016 திருத்தந்தை 23ம் யோவான் திருவிழா திருப்பலி**

திரு. ஜான் அலெக்சாண்டர்

**முன்னுரை**

அன்புக்குரியவர்களே, இன்று திருச்சபையில் ஒரு மகத்தான நாள், நீங்களும் நானும் திருப்பலியில் வெறும் பார்வையாளர்களாக மட்டும் இருந்துவிட்டு போகாமல் பங்குபெறுபவர்களாக மாறியதற்கு காரணமான திருத்தந்தை புனித 23ம் யோவான் அவர்களின் விழாவினை கொண்டாடும் நாள். மேலும் இன்றைய நற்செய்தியில் இயேசு, உணவருந்துவதற்கு முன்பாக தனது கைகளைக் கழுவாமல் சாப்பிடுவதைக் கண்ட பரிசேயர்கள் வியப்படைகிறார்கள். பரிசேயர்கள் சட்டங்களுக்கு புறத்தூய்மையை விட அகத்தூய்மையே மேலானது, அதிகக் கவனத்துக்குரியது. எனவே வெளித்தூய்மைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் உள்ளத் தூய்மைக்கு, தூய மனநிலைக்கும் அதிக அழுத்தம் கொடுக்க ஆண்டவர் இன்று நம்மை அழைக்கிறார். அதற்கான வழியையும் அவரே தருகிறார். உட்புறத்தில் உள்ளவை எவை? மனநிலை, எண்ணங்கள், ஆலோசனைகள், சிந்தனைகள், நன்றியுணர்வு, மகிழ்ச்சி இவை அனைத்தும்தான். இவற்றை தர்மமாகக் கொடுக்க இயேசு அறைகூவல் விடுக்கிறார். இவற்றை பிறரோடு பகிர்ந்து கொண்டு, நமது உள்ளமும் மனநிலையும் தூய்மையடைய தேவையான வரம் வேண்டி தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, எங்களைத் தூய்மைப்படுத்தும். எங்களுடைய மனம், சிந்தனை, ஏக்கங்கள் அனைத்தும் உம்மிடம் ஒப்புக்கொடுக்கிறோம். நாங்கள் இனி எங்களுக்காக மட்டும் வாழாமல் எங்களுக்காக மரித்து உயிர்த்த உமக்காக வாழும் வரத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய்மை என்பது வெளியிலிருந்து வருவதல்ல, மாறாக உள்ளார்ந்த விதத்தில் மனமாற்றம் பெற்று நம் செல்வத்தைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளும்போது நாம் தூயவர்களாக மாறி சமத்துவ சமுதாயம் உருவாக உழைத்திட தேவையான வரத்தைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. வெறும் சடங்குகளில் மட்டும் நாங்கள் அக்கறைக் கொள்ளாமல் அவை குறிக்கின்ற உள்கருத்து நலமான சிந்தனையும் அதிலிருந்து பிறக்கின்ற நலமான செயலும் எங்கள் வாழ்வில் துலங்க வேண்டுமென்ற இயேசுவின் போதனையை உணர வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் இறைவா, உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.10.2016 தூய அவிலா தெரேசா — திருப்பலி

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

இறையன்பில் இனியோரே, நம் தாய் திருச்சபையானது இன்று "அன்பே வாழ்வு" என்று வாழ்ந்த தூய அவிலா தெரேசாவின் விழாவைக் கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இவர் ஸ்பெயின் நாட்டில் அவிலா என்ற இடத்தில் 1515ம் ஆண்டு மார்ச் 28ம் நாள் பிறந்தார். 14வயது நடக்கும்போதே தாயை இழந்த இவள் நோயினால் துன்புற்று தூய யோசேப்பின் அருளால் ஓரளவு குணமடைந்தாள். கார்மேல் சபையில் சேர்ந்த இவள் இறைவனின் துணையால் பல சீர்த்திருத்தங்களை கொண்டு வந்தார். ஒருநாள் வருத்தத்துடன் செபம் செய்து கொண்டிருந்தபோது, இனி நீ மனிதர்களிடம் உரையாட வேண்டும், கடவுளின் தூதர்களிடம் உரையாட வேண்டும் என்று இறைவன் கூறக்கேட்டார். இவர் பல செபதவ முயற்சிகளால் 32 புதிய துறவற இல்லங்களை தோற்றுவித்தார். அன்பு மட்டுமே அனைத்திற்கும் ஈடாகிறது என்று மொழிந்து வாழ்ந்த அவிலா தெரேசா 1582, அக்டோபர் 4 அன்று இறைவனடி சேர்ந்தார். எனவே நாமும் அன்பை மட்டுமே வாழ்வாக கொண்டு பிறரிடம் அன்புடன் வாழும் வரத்தைக் கேட்டு இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பே உருவான இறைவா, அன்பே வாழ்வு என்று மொழிந்து வாழ்ந்து காட்டிய எம் புனிதையைப்போல நீர் தந்த அன்பான திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் உமது அன்பை வாழ்வாக்கி அதன்மூலம் மக்களை அன்பின் பாதையில் வழிநடத்திட வேண்டிய வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பு தந்தையே இறைவா, பல்வேறு பாவச் சூழல்களில் உழன்று கொண்டிருக்கும் மக்கள் அனைவரும் உமது பேரன்பின் மேன்மையை உணர்ந்து மனந்திரும்பவும், தூய வாழ்வு வாழ்தற்கான மன உறுதியை பெறவும் அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அருளே உருவான எம் இறைவா, தூய அவிலா தெரேசாவைப்போல இங்கு கூடியிருக்கும் நாங்கள் உம்மீது அளவில்லா அன்பும், நம்பிக்கையும் கொண்டு தன்னலமற்ற சேவையில் அவரைப்போன்று தொண்டுள்ளம் கொண்டவர்களாய் வாழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. அன்பின் மாதிரியே இறைவா, உம் அன்பை உணரமுடியாமல் தவித்துக்கொண்டிருக்கும் ஏழை எளிய உள்ளங்களுக்காய் மன்றாடுகிறோம். நீரே அவர்களுக்கு துணையாக இருந்து அவர்களின் துன்பங்களைத் துடைத்து ஆறுதலித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 16.10.2016 மறைப்பரப்பு ஞாயிறு — திருப்பலி

திரு. லூயிஸ் சகாயராஜ்

**முன்னுரை**

"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்" (மாற்கு 16:15)

இறையன்பில் இனியோரே, இறையரசின் மதிப்பீடுகளான அன்பு, அமைதி, நீதி, நம்பிக்கை ஆகியவற்றை தங்களின் நெஞ்சில் சுமந்து, இயேசுவின் கட்டளைகளை செயலாக்கம் செய்யும் எண்ணத்துடன் அன்புப்பணியாற்றும் அனைத்து மறைப்பரப்புப் பணியாளர்களையும் நன்றிக் கரம் குவித்து எண்ணிப் பார்க்கும் மறைப்பரப்பு பணிக்காக நமது அன்றாடப் பங்களிப்பை ஆய்ந்து பார்க்கும் இம்மறைப்பரப்பு ஞாயிறு இந்த ஆண்டும் வந்துள்ளது. ஆலயத்தில் ஒரு உறை

தருவார்கள், அவ்வுறையில் உண்டியலில் போடுவதற்குப் பதிலாக பணத்தைப் போட்டு காணிக்கையாகத் தருவதோடு நம்மில் பெரும்பாலோரின் கடமை முடிந்துவிடுகிறது.

மறைப்பரப்புப் பணி என்பது நம்மீதும் சுமத்தப்பட்ட கடமை என்பதை உணர்ந்து நாம் வாழுமிடத்தில், பணிதளத்தில் பயணத்தில், விளையாட்டில், கலையில், உழைப்பில், துன்பத்தில், இன்பத்தில், இறையழைத்தலில், இல்லறத்தில் என ஒவ்வொரு நிலையிலும் திருமுழுக்கின்போது நாம் பெற்றுக்கொண்ட மறைப்பரப்பு பணிக்கான உரிமையை கடமையுணர்வுடன் செயல்படுத்தக் கடமைப்பட்டுள்ளோம். நடமாடும் நற்கருணைப் பேழைகளாக, வாழும் விவிலியங்களாக, செயலாற்றும் செபமாலைகளாக நாம் மாற்றம் பெறும்போது நாமும் மறைப்பரப்புப் பணிபுரியும் கருவிகள் என்பதை தெளிந்து வாழ வரம் கேட்போம்.

காலம் நேரம் பாராது, சாதி, மதம், மொழி, இனம் என பாகுபாடு பாராது நற்செய்தி அறிவிப்புக் கட்டளையை சிரமேற்கொண்டு உணவு, உடை, உறைவிடம் என அடிப்படை உரிமைகளைக் கூட பெறமுடியாத நிலையிலும் மறைப்பரப்புப் பணிபுரியும் குருக்கள், துறவியர், பொதுநிலை பணியாளர்கள் என அனைவரின் நலனுக்காகவும், பாதுகாப்புக்காகவும் செபிப்போம். இத்திருப்பலி முடிவில் நாமும் மறைப்பரப்புப் பணியாளர்கள் என்ற உணர்வுடன் செல்வோம்.

**மன்னிப்பு வழிபாடு**

மறைப்பரப்பு ஞாயிறு நற்கருணைக் கொண்டாட்டத்திற்கு வருகைத் தந்துள்ள நாம் நமது குறைகளுக்காக மனம் வருந்துவோம். மறைப்பரப்புப் பணிகளை செய்யாத அப்பணிகளைத் தூண்டாத அப்பணிகளுக்கு உதவாத நேரங்களுக்காக மன்னிப்பு வேண்டுவோம்.

திருமுழுக்கின் வழியாக நான் பெற்றுக்கொண்ட நற்செய்தி அறிவிப்புக் கடமையை உணராது, திருமுழுக்கு அருளை இழந்து, வாழ்வின் பொருளின்றி வாழ்ந்த நேரங்களுக்காக மன்னித்தருள வேண்டுகிறேன், இறைவா என்னை மன்னியும்.

*பதில்: இரக்கமாயிரும் தந்தையே இறைவனே இரக்கமாயிரும்*

நற்கருணையின் வழியாக எம்மில் பிரசன்னமாகி உம்மைப்போல் எம்மை மாற்றிட மனுவான எம் இறைவா, உமது பிரசன்னத்தை என்னில் உள்வாங்கி அதனை பிரதிபலித்து வாழாத நேரங்களுக்காக மனம் வருந்தி மன்றாடுகிறேன், இறைவா என்னை மன்னியும்.

*பதில்: இரக்கமாயிரும் இயேசுவே மீட்பரே இரக்கமாயிரும்*

திருவிவிலியத்தில் உமது வார்த்தையின் வழியாக எம்மைத் திடப்படுத்தும் இறைவா, தூய ஆவியின் ஏவுதலையும் துணையையும் உணராமல், இறைவார்த்தையை ஏற்றுப் பலன் தராத பக்குவப்படாத நேரங்களுக்காக மன்னிக் வேண்டுகிறேன், இறைவா என்னை மன்னியும்.

*பதில்: இரக்கமாயிரும் ஆவியே இறைவனே இரக்கமாயிரும்.*

**இறைமக்கள் மன்றாட்டு**

1. அன்புத் தந்தையே இறைவா, எம் திருச்சபையில் மறைப்பரப்புப் பணிக்காக உழைக்கும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவரிலும் உமது ஆற்றலும், திடனும், பக்குவமும் நிறைந்து பலன்தர அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்புத் தந்தையே இறைவா, மறைப்பரப்புப் பணிக்காக தமது வாழ்வையே பணயம் வைத்து பணியாற்றும் மறைப்பணியாளர்கள் வாழ்வைப் பாதுகாக்கவும், உடல் உள்ள, ஆன்ம நலன்களால் நிரப்பி, உயிருக்கும் உடமைக்கும் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்து விடுவிக்கவும் வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எம் வாழ்வில் மறைப்பரப்புப் பணியாளர் என்ற உணர்வினைப் பெற்று, புதுப்பித்து அக்கடமையை துணிவுடன் செயலாற்றவும், தோல்கொடுத்து உதவிபுரியவும், துணைநின்று தாங்கிக் கொள்ளவும், உதவி செய்து உறுதுணையாய் நிற்கவும் எமக்கு நல்மனம் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. அன்புத் தந்தையே இறைவா, மறைப்பரப்புப் பணிகளை செய்வோரின் வளர்ச்சிக்காக நிதி உதவிகள் செய்யவும், துறவற மறைப்பணி வாழ்வுக்கு எமது பிள்ளைகளை தூண்டி வழிநடத்தவும் எமது முன்னோர்களின் தியாகமே, இன்றைய நமது உரிமை என்பதை உணர்ந்து செயல்படவும் எமக்கு அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**திருப்பலியின் முடிவில்**

மறைப்பரப்புக்காகவே வாழ்ந்து உயிர் நீத்த புனிதர்கள்: புனித சவேரியார், புனித தோமா, புனித அருளானந்தர், புனித அல்போன்சா, புனித அன்னை தெரேசா, மறைப்பரப்பு பணிகளின் பாதுகாவலராகிய புனித குழந்தை தெரேசா, புனித ஜான்போஸ்கோ, புனித தேவசகாயம் போன்ற புனிதர்களின் வேடம் தரித்த பிள்ளைகளை சிறு கருத்துக்களைப் பகிரச் செய்து மறைப்பரப்பு பணியின் மகத்துவத்தை விளக்கலாம்.

**முடிவில்**

- நற்செய்தி அறிவிப்பு என்மீது சுமத்தப்பட்ட கடமை
- நற்செய்தியை அறிவிக்காவிட்டால் ஐயோ எனக்குக் கேடு
- நற்செய்தியின் பொருட்டு துன்புறுவதும் எனக்கு பாக்கியமே

போன்ற வாக்குகளை திரும்பச் சொல்லச் செய்து வழியனுப்பலாம்.

**18.10.2016 தூய லூக்கா பெருவிழா திருப்பலி**

திருமதி. ராணி சம்பந்தன்

**முன்னுரை**

கிறிஸ்துவின் பிரியமான இறைமக்களே, இன்றைய நாள் நம் நற்செய்தியாளர் தூய லூக்காவின் பெருவிழா நாளாகும். அந்தியோக்கியா நகரில் அவிசுவாசிகளான பெற்றோருக்கு பிறந்து தான்மட்டும் திருமறையை தழுவி பெருமகனார். இயேசுவின் போதனைகளை உலகிற்கு தந்தவர் தூய பவுலின் இரண்டாம், மூன்றாம் பயணங்களில் பங்கு பெற்றவர். ஓவியர், மருத்துவர் என்று சொல்லப்படுபவர். நற்செய்தி நூலில் உள்ள "என் ஆன்மா ஆண்டவரை ஏற்றி போற்றுகின்றது" என்ற நமது அன்னை மரியாளின் பாடலையும், "கர்த்தர் கற்பித்த மன்றாட்டையும் "மங்கள வார்த்தை. மன்றாட்டையும் எழுதியவரும் இவரே. மற்றும் பெண்களையும் இயேசு மதித்தார், தன் சீடத்திகளாக அவர்களையும் ஏற்றுக்கொண்டார் என்ற செய்தியையும் இவர் நற்செய்தி நூலில் காணலாம். இவர் எழுதிய "ஊதாரி மகனின் உவமை" உலகிலேயே சிறந்தவற்றுள் ஒன்றாக கருதப்படுகிறது. இதனால் எண்ணற்ற பாவிகளை கடவுளிடம் கொண்டு சேர்த்திருக்கிறது.

கடவுளிடம் நம்பிக்கை வைக்கக் கூடிய பல நிகழ்ச்சிகளை இவர் எழுதியுள்ளார். புறவினத்தார் அனைவருமே விண்ணகம் சேர வேண்டும் என்று தூய பவுல் உரைத்ததை தம் நூலில் வற்புறுத்தியுள்ளார் நற்செய்தி நூல் மட்டுமல்ல, திருத்தூதுப் பணி என்னும் நூலையும் இவர் எழுதியுள்ளார். நாசரேத்தூரிலிருந்து எருசலேம் வரையுள்ள நிகழ்வுகளை நற்செய்தி நூலிலும் எருசலேம் முதல் உரோமை வரை நிகழ்வுகளை திருத்தூதுப்பணி நூலிலும் தந்திருக்கிறார். கடவுளின் இரக்கம் எல்லையற்றது என்று சுட்டிக்காட்டும் இவரைப்போல இறை இரக்கத்தின் காலமாகிய இந்நாட்களில் நாமும் இரக்கத்தின் தூதுவர்களாக வாழ இத்திருப்பலியில் இணைவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, நம் தாய் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தையின் வழிகாட்டுதலின்படி நடக்கவும் கர்தினால்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரில் ஒருசிலர் தெரிந்தோ தெரியாமலோ ஜாதிக் கண்ணோட்டத்தோடு பார்த்து பணி செய்யும் அவல நிலையை மாற்றி ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நியதியை ஏற்று பணி செய்ய வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.
2. "அன்பு இறைவா, தன்னைத்தான் நேசிப்பதுபோல பிறரையும் நேசி" என்ற உமது அன்பு, கட்டளையை சிரமேற்கொண்டு மாந்தர் அனைவரும் நலமாகவும், உறவாகவும், சமமாகவும், பலமாகவும் வாழ அன்பு ஒன்றே ஆயுதம் என்ற வளையத்திற்குள் வலம் வர வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.
3. நம்பிக்கையின் தெய்வமே இறைவா, மந்தையை விட்டு மக்கள் வெளியேறிக்கொண்டிருக்கும் இக்கால சூழலில் நம் குறைகளை களைந்து மக்கள் மனதில் நம்பகத்தன்மையை உருவாக்க வேண்டி பிற சபைகளின் கவர்ச்சி செயல்பாடுகளை கையகப்படுத்துவதை விட்டுவிட்டு உண்மையான பக்தி உணர்வுடன் நம் கத்தோலிக்க திருச்சபை வளம் பெற வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.
4. பாதுகாப்பின் இறைவா, இதுநாள்வரை இலை மறை காயாக மட்டும் மதவாதத்தை வெளிப்படுத்தி கொண்டிருந்த மதவாத அமைப்புகள் இப்பொழுது வெளிப்படையாக தங்கள் மதவெறி தாக்குதல்களை பல வழிகளில் வெளிப்படுத்தும் இந்நிலைமாறி இறையரசை பாதுகாக்கும் வல்லமையை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுவோம்.

**19.10.2016 திருச்சிலுவையின் புனித சின்னப்பர் திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

**"நாங்கள் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் போதிக்கின்றோம்" (1கொரி 1:23)**

தூய சிலுவை சின்னப்பர் இத்தாலி நாட்டினர். ஆண்டவருடைய திருப்பாடல்களைக் காட்சித் தியானமாகச் சிந்தையில் இருத்தி ஏராளமான ஞானப் பயன்களை அடைந்தவர். திருப்பாடுகளின் சபை என்ற துறவற சபையினைத் தோற்றுவித்தவர். இவர் ஏழை எளியோர், பாவ நிலையில் நீடித்தவர் ஆகியோரிடம் பரிவிரக்கத்துடன் திருப்பாடல்களை மையமாகக் கொண்ட மறையுரைகளின் வழியாக மக்களைப் புண்ணிய பாதைக்குக் கொண்டுவர அயராது உழைத்தார். பொதுநிலையினரை ஒன்றாகத் திரட்டி திருச்சிலுவைப் பவனி செபத்துடன் கூடிய கண் விழிப்பு, உண்ணா நோன்பு, திருப்பலி இவற்றில் முழுமையாக ஈடுபடுத்தினார். புகழ் வாய்ந்த கர்தினால் நியுமென் என்பவர் மனந்திரும்பி மெய்மறையைத் தழுவியதற்கு இவர் நிறுவிய சபைக் குருக்களே காரணம் என்பர். திருப்பாடுகளை மையமாகக் கொண்டு வாழ இத்தகைய ஒரு துறவற சபையை நிறுவிய இந்தப் புனிதரைப் பின்பற்றுவோம். சிலுவையில் தொங்கிக்கொண்டிருக்கும் கிறிஸ்துவை நம்பிக்கையோடு பற்றிக்கொண்டு வாழ்க்கை பலியை தொடர சிலுவை பலியை பக்தியோடு சிறப்பிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரையும் உமது சிலுவையின் நிழலில் வைத்து பாதுகாக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. விழுகிற யாவரையும் தாங்குபவரே, உண்மைக்கும், நீதிக்கும், நேர்மைக்கும், உழைக்கும் நல்லுள்ளம் கொண்டவர்கள் சந்திக்கும் பல துன்பங்கள், கொடுமைகள், அவமானங்கள் போன்றவைகளை கண்டு மனந்தளராமல் கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை மனதில் நிலைநிறுத்தி தங்களின் நற்பணிகளை செய்யும் மனவலிமைத்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. எங்களுடைய பாவங்களை சிலுவையில் சுமந்தவரே, இன்றைய நாட்களில் பல இடங்களில் கிறிஸ்துவராக இருக்கும் காரணத்தால் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை இரத்தம் சிந்தி உயிர் தியாகம் செய்யும் அனைவருக்கும் விண்ணக பரிசு கிடைக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**22.10.2016 திருத்தந்தை 2ம் ஜான் பால் திருப்பலி**

சகோ. வின்சென்ட் சச.

**முன்னுரை**

அன்பின் இறைமக்களே, நாம் வாழும் இவ்வுலகில் மாற்றம் என்பது நிலையானது அது மட்டுமே மாறாதது. நம் தினசரி நிகழ்வில் மாற்றம் வரும்போது நமக்கு குழப்பம் கலந்த ஒரு புது அனுபவம் பிறக்கிறது. அந்த மாற்றம் நம்மை வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் அழைத்து செல்கிறது. அவ்வண்ணமே இயேசுவின் படிப்பினைகள் மக்கள் மத்தியில் குழப்பத்தை கொணர்ந்தாலும் வாழ்வின் முழு அர்த்தத்தையும் இறைவனின் எண்ணத்தையும் நமக்கு பாடமாக கற்பிக்கின்றது. இயேசு மக்கள் மத்தியில் மனமாற்றத்தையும் அதன் பலன்களையும் எடுத்துரைத்து இறைவனின் அரசை உணரச் செய்தார். அதே படிப்பினையை கையில் கொண்டு இவ்வுலகில் மிக பெரிய மாற்றம் கொண்டு வந்து இறையரசை நிறுவியவர்தான் நாம் இன்று நினைவு கூறும் புனிதர் திருத்தந்தை புனித இரண்டாம் ஜான்பால் மக்களின் மத்தியிலும் திருச்சபையின் கோட்பாடுகளிலும் இறையேசுவின் படிப்பினையை போதித்து அதன் வளர்ச்சியை உளமாற கண்டவர் இவர். இப்புனிதரை போன்று இறையேசுவின் படிப்பினையை உணர்ந்து ஒரு நல்ல சாட்சிய வாழ்வு வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் உற்றே எம் இறைவா, நீர் விட்டுசென்ற உம் அன்பின் அரசை கட்டியாளும் எம் திருப்பணியாளர்களுக்காக வேண்டுகிறோம். உம் அன்பின் மேன்மையை உணர்ந்து அதை உம் மந்தைகளுக்கு பிரதிபலித்து இறையரசை நிறுவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

2. தெய்வீக மருத்துவரே எம் இறைவா, வயதான நோயுற்றோருக்காக மன்றாடுகின்றோம். அவர்களுக்கு புனித இரண்டாம் ஜான் பாலை போன்று தங்களுக்கு ஏற்பட்ட நோயை தாங்கும் மன திடத்தையும் உடல் திடத்தையும் தந்து காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

3. உறவை விரும்பும் இறைவா, மனித இனம் தன்னலம் மறந்து அன்பு எனும் கருவி கொண்டு திருத்தந்தை ஜான் பால் விட்டுச்சென்ற வாழ்வின் படிப்பினைகளை நன்கு கற்று அதை வாழ்வாக்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பு இறைவா, மக்கள் மத்தியில் வாழ்விற்குத் தேவையான நல்லதொரு அர்த்தத்தையும், பொருளையும் உணர்த்தியதற்காக நன்றி கூறுகின்றோம். அவ்வாறே நாங்களும் உம்மீது ஆழ்ந்த நம்பிக்கையும், இறை இரக்கத்தின் மக்களாகவும் வாழ தேவையான அனைத்து அருள்வரங்களையும் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**23.10.2016 ஆண்டின் பொதுக்காலம் 30ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. பத்மாவதி

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை தேவரீர் தாமே ஆசீர்வதித்து அவர்களின் இறைப்பணி சிறக்க, நல்ல ஞானத்தையும் ஆற்றலையும், உள்ள உடல் நலத்தையும் கொடுத்து காத்திட வேண்டுமாய், உம்மை மன்றாடுகிறோம்.

2. ஏழைகளின் தந்தையே இறைவா, இச்சமூகத்தில் கைவிடப்பட்டு கலங்கி தவிக்கும் ஏழைகளையும், கைம்பெண்களையும், நீர் கரம்பிடித்து தூக்கிடவும், அவர்களது தேவைகளில் உதவிடவும் அருள் புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. தாயும் தந்தையுமான இறைவா, எம் பிள்ளைகள் வழிதவறி செல்லாது காத்துகொள்ளவும், உமது இறைச்சித்தத்தை உணர்ந்து புனிதர் கப்பிஸ்திரான் போன்றும் புனித பவுலடியாரைப் போன்றும் வாழ்ந்திட வழிநடத்தும்படிக்கு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் இறைவா, உம் மக்களாகிய நாங்கள் அனைவரும் உடல் உள்ள நலத்துடன் வாழவும், எம் பங்குத்தந்தையையும், பங்கு மக்களையும் நிறைவாக ஆசீர்வதியும். நாங்கள் அனைவரும் உம்மைப்போல் இரக்கம் நிறைந்தவர்களாயும், மன்னிக்கும் மனங்கொண்டவர்களாயும் வாழ்ந்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

**30.10.2016 ஆண்டின் பொதுக்காலம் 31ம் ஞாயிறு திருப்பலி**

திருமதி. டிலைலா சேவியர்

**முன்னுரை**

சில பிரச்சனைகளை நாமே தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் சில பிரச்சனைகளைக் கடவுளால் மட்டுமே தீர்த்துவைக்க முடியும். அப்படிபட்ட பிரச்சனைகளில் ஒன்று பாவமன்னிப்பினால் வரும் மன அமைதி. அப்படிப்பட்ட மீட்பினை மனஅமைதியை மகிழ்ச்சியைத்தான் சக்கேயு இயேசுவை சந்தித்துப்பின் அடைந்தார். நாமும் பல முறை பாவத்தினால் மனதில் அமைதியின்றி துன்பப்படுகிறோம். அந்நேரங்களில் இறைவனின் அன்பையும், இரக்கத்தையும் பற்றி மனதில் நினைத்து பார்ப்போம். அவரை சந்திக்க முயற்சி செய்வோம். சாலமோனின் ஞானம் கூறுவதுபோல கடவுள் அவரால் படைக்கப்பட்ட மனிதர்கள் எல்லோரும் வாழவேண்டுமென்று விரும்பி எல்லோருடைய பாவங்களையும் மன்னிக்கிறார் என்பதை விசுவசிப்போம். அவர் நமது அழைப்பிற்கேற்ப நம்மைத் தகுதியுள்ளவராக்குவார் (2தெச 1:11). எனவே சக்கேயுவைப்போல நாமும் இயேசுவை சந்தித்து அவர்தரும் பாவ மன்னிப்பினால் மீட்பு பெறவும் நிலையில்லா வாழ்வு பெறவும் இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நல்லாயனாம் இறைவா, திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மால் என்றும் ஆசிர்வதிக்கப்படவும், நீர் ஒப்படைத்த திருச்சபையையும், உலக மக்களையும் ஆயன் தன் மந்தைகளைக் காப்பதுபோல பாவ சூழ்நிலைகளிலிருந்தும் துன்பங்களினால் தீமையான பாதைகளுக்கு செல்லாதபடி காத்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியே உருவான இறைவா, உம்முடைய சந்திப்பு அநேக மக்களை துன்பத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், நோயிலிருந்தும் காத்ததுபோல நாங்கள் எங்கள் அயலாரை சந்திக்கும்போது அவர்களுக்கு ஆறுதலாகவும், தேறுதலாகவும், சமாதானம் அளிப்பவர்களாகவும் இருக்கும் நல்ல மனதைத் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. சமாதானத்தின் இருப்பிடமே இறைவா, குடும்பங்களில் ஏற்படும் பிரச்சனைகள், பிளவுகள், பிரிவுகள் போன்றவைகளுக்கு காரணமாக இருக்கும் சந்தேகங்கள், தவறான கருத்து மாற்றங்கள், பிறரிடம் வரும் கருத்து வேறுபாடுகள் இவைகள் அனைத்தையும் நீர் உமது வல்லமையால் மாற்றி, அவற்றிற்கு பதிலாக, ஒருவர் மற்றவர்களிடம் நல்லெண்ணம், விட்டுக்கொடுத்தல், தேற்றிக்கொள்ளுதல் போன்ற நல்ல பண்புகளில் நாங்கள் வளர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் நாயகனே இறைவா, நாங்கள் செபிக்கும்போதெல்லாம் எங்களுக்குத் தேவையான நம்பிக்கையோடு கேட்டு வேண்டுதல்களை நிறைவேற்றியதற்காக நன்றி கூறுகிறோம். எங்களின் செபத்தின்மீது நம்பிக்கை வைத்து அநேகர் தங்களின் தேவைகளுக்காக எங்களிடம் கேட்கும் செபங்களையும் உம்மிடம் ஒப்படைக்கின்றோம். தயவாய் எங்கள் வழியாக அவர்களின் தேவைகளை நிறைவேற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## தீபத்திருநாள் திருப்பலி

சகோ. பிபின்

**முன்னுரை**

தீபங்கள் மகிழ்ச்சியின் அடையாளம், ஒற்றுமையின் அடையாளம். தீபங்கள் வாழ்வின் முத்துக்கள், தீபங்கள் வாழ்வளிக்கும் வித்துக்கள் என்று நாம் அறிவோம். இன்று கொண்டாடும் தீபத்திருநாள் நம்மை ஒளிரும் தீபமாகவும், மற்றவர் வாழ்வில் ஒளியேற்றும் தீபமாகவும் வாழ அழைப்பு விடுக்கிறது.

(படத்தின் மீதுள்ள மெழுகுவர்த்திகள் தீக்குச்சியினால் ஏற்றப்படுகின்றன)

"மெழுகுவர்த்திக்கு உயிர் கொடுக்க தன் உயிர்விட்டது தீக்குச்சி அதை நினைத்து மனம் உருகியது மெழுகுவர்த்தி". சிந்திப்போம். இந்த தீக்குச்சிப்போல் நம்மால் முடிந்ததை மற்றவருக்குச் செய்ய மேலும் இந்த மெழுகுவர்த்தியைப்போல நம் வாழ்வில் ஒளியேற்றிய அனைத்து உள்ளங்களுக்காகவும் இந்த நிமிடத்தில் மனமுருகி செபிப்போம். ஒரு ஒளிக்கொண்டு இன்னொரு ஒளியை ஏற்றும்போது ஒளி இரண்டு மடங்காகிறது. அதைப்போல நாமும் மற்றவருக்கு நன்மை செய்தால் அன்பு இரண்டு மடங்காகிறது. ஆகவே இந்த திருப்பலியில் நானே உலகின் ஒளி என்று கூறும் கிறிஸ்துவின் சாட்சிகளாய் வாழும் வரத்தை இறைவனிடம் கேட்போம் நம்மை நல்ல தீபமாக மாற்ற வேண்டுவோம்.

"நம் வாழ்வில் தீபங்கள் ஒளிரட்டும் நன்மைகள் பெருகட்டும்

சிரித்த முகத்துடன் கொண்டாடுவோம் இந்த சிறப்பான நாளை".

**வருகைப்பாடல்: தீபத்தின் ஒளியனில் இணைவோம்...**

வருகைபவனி முடிந்த பிறகு குருக்கள் மகிழ்ச்சியின் அடையாளமாய் தீபம் ஏற்றுவர் (குத்துவிளக்கு ஏற்றுதல்)

**நன்றி மன்றாட்டு**

நல்ல தந்தையே இறைவா, இந்த சிறப்பான நாளிலே இன்முகத்துடன் கொண்டாடும் இந்த தீபாவளி திருநாளை கொடுத்ததற்காக நன்றி. இந்த நல்ல நாளிலே எங்களோடிருந்து எங்களுக்கு மகிழ்ச்சி தரும் எம் இறைவா உமக்கு நன்றிகள். இந்த இனிமையான நாளிலே உமது தீப ஒளிக்கொண்டு எங்களையும் தீபங்களாக மாற்றிய நல்ல இறைவா உமக்கு மகிழ்ச்சியான நன்றிகள். நன்றி இறவை நன்றி.

## பகுதி - 2 விசுவாசத்தில் வளர...

### 1. திருத்தந்தை 23ம் யோவான் திருச்சபைக்கு செய்த பெரும்பணி

திரு. ஜான் அலெக்சாண்டர்

திருச்சபையின் வரலாற்று பக்கங்களை பார்க்கும்போது ஏறத்தாழ 2000 ஆண்டுகளில் ஒருவருக்கொருவர் பல வகைகளில் வேறுபட்டவர்கள் பேதுருவின் நாற்காலியை அலங்கரித்துள்ளதை நாம் பார்க்க முடியும். நவீன மாற்றங்களின் ஆதிக்கம் துவங்கியபோது தனது கொள்கைகளால் தடுமாறிய 9ம் பயஸ், நவீனத்துவத்தை முற்றிலும் எதிர்த்த 10ம் பயஸ் என பல திருத்தந்தையர்களின் எடுத்துக்காட்டுகளைச் சொல்லலாம். இப்படியிருக்க 1958ல் திருச்சபை முதன்முதலில் ஒரு புதிய காற்றை சுவாசிக்க ஆரம்பித்தது. அந்த காற்று துணிச்சல்மிக்க, முற்போக்கு சிந்தனைகள் நிறைந்த, கூர்நோக்கு பார்வையுடைய ஏஞ்சலோ ரொன்காலி, 23ம் யோவான் என்ற பெயரில் புதிய திருத்தந்தையாக மாறியதால் வந்தது.

தற்போதைய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதே போன்ற உணர்வுதான் உலகில் பலருக்கு ஏற்பட்டது. திருச்சபையை புதிய பாதையில் வழிநடத்தும் விதமாக திருத்தந்தை பிரான்சிஸ் நற்செய்தியின் மதிப்பீடுகளை

அனைவருக்கும் குறிப்பாக ஏழை மற்றும் விளிம்பில் தள்ளப்பட்ட மக்களுக்கு எடுத்து செல்வார் என்ற நம்பிக்கையை கூட்டியவர். தனது சொல்லால் மட்டுமல்ல வாழ்வாலும் அதை கடைப்பிடித்து வருபவர் நமது திருத்தந்தை பிரான்சிஸ். திருத்தந்தை 23ம் யோவானை பற்றிய கட்டுரையில் தற்போதைய திருத்தந்தையைப் பற்றி ஏன் கூறுகிறேன் என்று நீங்கள் கேட்கலாம். இந்த இருவருக்கும் பல ஒற்றுமைகள் உண்டு. இருவரும் தங்களது அர்ப்பண வாழ்வை மக்களோடு மக்களாக இணைந்து வாழ்ந்தவர்கள், ஏழை விவசாய குடும்பத்தில் பிறந்தவர்கள், பிறருடைய உதவிகளை பெற்று குருத்துவக்கல்வி பயின்றவர்கள், உலகப்போரின் கொடுமைகளை அனுபவித்தவர்கள் குறிப்பாக திருச்சபையில் புதிய காற்றை புதிய கண்ணோட்டத்தை கொண்டு வந்தவர்கள்.

திருத்தந்தை 23ம் யோவான் 1870ம் ஆண்டுக்குப்பிறகு உரோமை மறைமாவட்டத்தில் மேய்ப்புப்பணி ஆய்வை மேற்கொண்ட முதல் ஆயர் என்ற முத்திரையை பதித்தார். போலியோ நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளையும், மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளையும் நேரில் சென்று சந்தித்தார். அதுமட்டுமல்ல சிறைச்சாலைக்கு சென்று அங்குள்ள கைதிகளை குறிப்பாக இளையோரை சந்தித்தார். அப்போது ஒருமுறை அவர், "உங்களால் என்னிடம் வர இயலாது. எனவே நானே உங்களிடம் வந்திருக்கிறேன்" என்று கூறினார். இதனால் அவரை புகழ்ந்தும் எழுதினார்கள் ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் இகழ்ந்தும் பேசினார்கள்.

திருச்சபையைப் புதிய உலகிற்குள் கொண்டு சென்ற பெருமைக்குரியவராக உலக மக்களிடம் பெயர் பெற்றார். திருத்தந்தையாக பொறுப்பேற்று சரியாக 90வது நாளில் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கத்தைக் கூட்டினார். முக்கியமாக அவர் கிழக்கத்திய மரபு வழி கிறிஸ்தவர்களையும், பிரிந்துபோன சகோதரர்களையும், சங்கம் தொடங்குவதற்கு முன்பாக கர்தினால்கள் குழுமியிருந்த அறையின் சன்னல் கதவுகளைத் திறந்துவிட்டு, "மாற்றம் நிறைந்த காற்று திருச்சபைக்குள் வரட்டும்" என்று கூறியதை சிலர் நகைச்சுவையாக எடுத்துக்கொண்டாலும், ஒருசிலருக்கு அது எதிர்கால திருச்சபையை தீர்க்கத்தரிசனமாக அவர் கூறியிருப்பதை உணர்ந்தார்கள்.

அதுமட்டுமல்ல, யூதர்களுடனான கத்தோலிக்க திருச்சபையின் உறவை பலப்படுத்தி, சீரமைக்க முயற்சிகள் மேற்கொண்டவர் நமது 23ம் யோவான் திருத்தந்தை. இதனால் கத்தோலிக்கர்களுக்கு மட்டுமல்ல பல்வேறு மக்களிடையேயும் அன்பான கனிவான உறவுகளை திருச்சபையின் மூலம் வளர வைத்தவரும் இவர்தான். விரிசலுற்று விரிவடைந்து கிடந்த உறவிற்கு இணைப்பு பாலமாக திகழ்ந்தார். ஒருமுறை தன்னுடைய 80வது பிறந்த நாளுக்கான வாழ்த்திதழை அனுப்பிய சோவியத் நாட்டுத்தலைவர் நிகிட்டா குருச்சேவ் அவர்களுக்கு பதில் கடிதம் அனுப்பக்கூடாது என்ற தனது ஆலோசகர்களின் பரிந்துரைகளையும் மீறி திருத்தந்தை 23ம் யோவான் தன் பதில் மடலை அனுப்பினார். "அமைதிக்காக" என்னும் திருமடலை ஏப்ரல் 1963ல் எழுதியபோது அதில் பல்வேறு காரணங்கள் இருப்பினும், சமுதாய, அரசியல் வேறுபாடுகள் சர்ச்சைகள் காணப்பட்டாலும் அமைதிக்காக ஒன்றாக சேர்ந்து உழைத்திட அழைத்தார். இதுவே அரவது இறுதி திருமடலாக அமையும் என்று யாரும் நினைக்கவில்லை.

53ஆண்டுகளுக்கு முன் அக்டோபர் 11ம் நாள் துவங்கப்பட்ட 2ம் வத்திக்கான் சங்கத்தில் உலகின் 2860 ஆயர்கள் ஒன்று கூடியது மறைக்கல்வி மாநாட்டிற்காக அல்ல. மாறாக எதிர்கால திருஅவையின் முகத்தை உருவாக்க. திருச்சபை வரலாற்றில் திருத்தந்தை 23ம் யோவான் நிகழ்த்திய குறிப்பிடத்தக்க நிகழ்வாக, 350 ஆண்டுகளுக்கு பிறகு இதுபோன்று ஒன்று நடந்தது. இதுவே ஒரு மாற்றம் தானே வளர்ச்சிதானே. இரண்டாம் வத்திக்கான் சங்கம் ஆரம்பித்த நாளையே திருச்சபை இவரது விழாவாக (அக்டோபர் 11ம் நாள்) கொண்டாடுகிறது.

*இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் மூலம் திருத்தந்தை 23ம் யோவான் திருச்சபையில் கொண்டுவந்த பல மாற்றங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை பார்ப்போம்.*

**திருவழிபாடு:** திருப்பலி வாசகங்கள் பழைய ஏற்பாடு வாசகங்களோடு மூன்று ஆண்டுகள் கொண்ட ஒரு சுழற்சியில் மத்தேயு, லூக்கா மற்றும் மாற்கு நற்செய்தி பகுதிகளை முன்னிலைப்படுத்தப்பட்டு அந்தந்த வட்டார மொழிகளில் பயன்படுத்த முடிவானது. மேலும் 1969 முதல் மக்களைப் பார்க்கும் விதத்தில் குருக்கள் திருப்பலி நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டனர். அதற்கு முன் குருக்கள் நற்கருணை பேழையை பார்த்தவாரே திருப்பலி நிகழ்த்தி வந்தனர். பல கருத்துக்களுக்காக நற்கருணை மன்றாட்டுக்களை ஏற்படுத்தி இறைமக்களோடு இணைந்து ஒரே சமூகமாக திருப்பலி நிகழ்த்தப்பட்டது. திருவுடல் திருரத்தம் ஆகிய இரண்டையும் இறைமக்களுக்கு அளிக்க முடிவு செய்யப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரப்பூர்வ புதிய திருப்பலி புத்தகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

**கிறிஸ்தவ ஒன்றிப்பு:** கத்தோலிக்கர்களை கிறிஸ்துவ ஒன்றிப்பில் வாழ ஊக்குவித்ததொடு கிழக்கத்திய மரபு வழி மற்றும் பிரிவினை கிறிஸ்தவர்களையும், "பிரிந்த சகோதரர்கள்" என்றே அழைக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

**ஜனநாயகம் மற்றும் மத சுந்திரம்:** திருச்சபை முதல் முறையாக மக்களுக்கு உண்டான மத சுதந்திரத்தை ஏற்றுக்கொண்டது, ஆதரித்தது.

**யூதர்களுடனான நட்புரவு:** யூதர்களை கடவுளால் புறக்கணிக்கப்பட்டவர்கள் என்று கருதுவதை நிறுத்தி அவர்களுடன் நட்புறவு பாராட்ட தயங்கக்கூடாது என்றும் அறிவிக்கப்பட்டது.

**பிறமத நல்லிணக்கம்:** பிற மத மக்களோடு சகோதரத்துவத்தை வளர்த்துக்கொள்வது, கிறிஸ்தவ பண்பாக கருதப்பட்டது.

**அர்ப்பண வாழ்வு (துறவறம்):** துறவியர் தங்களது சபையின் நோக்கத்தை ஆழமாக அறிந்து கொண்டு புதுப்பித்துக்கொள்வது மற்றும் காலத்தின் மாற்றங்களுக்கேற்ப இறைப்பணி செய்ய தங்களை நன்கு பக்குவப்படுத்திக்கொள்வது.

**திருச்சபைச் சட்டம்:** நடைமுறை சாத்தியங்களுக்கு ஏற்ப திருத்தி அமைக்கப்பட்ட திருச்சபையின் சட்டங்கள். இதன் இறுதி வடிவம் 1983ம் ஆண்டு அப்போதைய திருத்தந்தை 2ம் யோவான் பவுல் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது.

வத்திக்கான் சங்கத்தின்போது, க்யூரியா உறுப்பினர்களின் எதிர்ப்பையும் தாண்டி நீதிக்காக குரல் கொடுத்தல், யூதர்களோடு ஒற்றுமை, நவீன உலகின் சவால்கள் போன்றவற்றை ஆயர்கள் முன்வந்து இறைமக்களோடும் சமுதாயத்தினரோடும் நேரடியாக விவாதிக்க வேண்டுமென்று அழுத்தமாக எடுத்துரைத்தார் திருத்தந்தை 23ம் யோவான்.

இவரின் வயிற்றில் புற்றுநோய் தாக்கியிருப்பதை 1962 செப்டம்பர் 23ம் நாள் மருத்துவர்கள் கண்டுபிடித்தார்கள். அதன்பிறகு தனது பொது நிகழ்வை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொண்ட திருத்தந்தை, திருச்சபையின் வளர்ச்சி குறித்து சிந்தித்து கருத்து தெரிவித்தபடி இருந்தார். 1963ம் ஆண்டு ஜூன் 3ம் நாள் மறைந்தார். 2ம் வத்திக்கான் சங்கம் முடிவடைவதற்கு முன்பே மரணமடைந்தாலும் இவரது பணிகள் கத்தோலிக்க மரபில் புதிய சீர்த்திருத்தங்களுக்கு வழிவகுத்தது. நிர்வாகத்திலும் பல மாறுதல்கள் வந்தது. உலக சமாதானத்தை விரும்பிய ஆற்றல் மிக்கவரான இவர் திருத்தி அமைக்கப்பட வேண்டிய எதிர்கால திருச்சபையின் வளர்ச்சிக்கு வித்திட்ட ஒரு மாபெரும் திருத்தந்தை. இன்று திருச்சபையில் காணப்படும் முற்போக்கு சிந்தனைகள், சீரிய திட்டங்கள் அனைத்தும் அன்று அவர் துவங்கியது. அமைதியையும் மகிழ்ச்சியையும் கொண்டு உலகில் நற்செய்தியின் ஒளியை அனைத்து மக்களுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பது அவர் விட்டு சென்ற முன்மாதிரியாகும். அவசியமான மாற்றங்களைத் துணிச்சலுடன் முன்னெடுக்கும் உத்வேகம் உள்ளவர்களே வரலாற்றில் போற்றப்படுகிறார்கள்.

## 2. திருத்தந்தை 23ம் ஜான் தந்த இரக்கத்தின் சாட்சியம்

திரு. ஜான் சுரேஷ்

"நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம் மாறாக உங்களை வலக்கண்ணத்தில் அறைபவருக்கு மறுக்கண்ணத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத். 5: 39)

இத்தாலியில் சோட்டா இல் மாண்டி என்னும் இடத்தில் 1881, நவம்பர் 25 அன்று பிறந்தார் ஏஞ்சலோ ரொன்கால்லி. ஜீயோவான்னி பப்டிஸ்டா ரொன்கால்லி மற்றும் மரியன்னா ஜீலியா மஸெல்லா ஆகியோரின் 12 பிள்ளைகளுள் நான்காவதாகவும் முதல் ஆண்பிள்ளையாகவும் பிறந்தவர் இவர். மதிப்பும் மாண்பும் மிகுந்த குடும்பத்தில் பிறந்ததால் அதே குணத்தை தனது குணமாகவும் கொண்டிருந்தார். உரோமையில் இறையியல் பயின்ற ஏஞ்சலோ 1904ல் உரோமையில் குருத்துவ அருள்பொழிவு பெற்றார். முதல் உலகப் போர் ஆரம்பமானபோது இத்தாலி படை பணியில் ஏஞ்சலோ நியமனம் பெற்றார். அங்கு தனது மருத்துவச் சேவையும் ஆன்மீக உதவிகளும் நல்கினார்.

"பணிவும் சமாதானமும்" என்ற விருதுவாக்காக எடுத்துக்கொண்ட ஏஞ்சலோ அதையே கடைப்பிடித்து வாழ ஆரம்பித்தார். 1944ல் இரண்டாம் உலகப்போர் மூண்டபோது திருத்தந்தை 12ம் பத்திநாதர் உத்தரவின்பேரில் பிரான்ஸ் நாட்டுக்கு திருத்தந்தையின் தூதுவராகச் சென்றார். பிரான்ஸ் நாடு வத்திக்கானுடன் நல்லுறவு பேணுவதற்கு வழி வகுத்தார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் இறந்ததும் 1958 அக்டோபர் 28 அன்று புதிய திருத்தந்தையாக தேர்வு பெற்றார். தன் பெயரை 23ம் யோவான் என்று எடுத்துக் கொண்டார். இவரின் வயிற்றில் புற்றுநோய் இருப்பது 1962 செப்டம்பர் 23 அன்று கண்டுபிடிக்கப்பட்டது. 1963, ஜூன் 3ம் நாள் இறந்தார். உலக சமாதானத்தை விரும்பிய இவரை திருத்தந்தை 2ம் ஜான்பால் செப்டம்பர் 3, 2000 அன்று அருளாளராக உயர்த்தினார். திருத்தந்தை பிரான்சிஸ் 2014, ஏப்ரல் 27 அன்று புனித நிலைக்கு உயர்த்தினார். "அவசியமான மாற்றங்களை துணிச்சலுடன் முன்னெடுக்கும் உத்வேகம் உள்ளவர்கள் வரலாற்றில் போற்றப்படுகிறார்கள், என்பதற்கு இவர் ஒரு மாபெரும் எடுத்துக்காட்டு.

## 3. செபமாலையும் கிறிஸ்தவ விசுவாசமும் - ஒரு புரிதல்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

அன்று சிலுவையில் அறையப்பட்ட கள்வன் நீண்ட செபம் ஒன்றும் செய்யவில்லை. இயேசுவைப் பார்த்து விசுவாசத்துடன் ஒரு சிறு செபம் செய்தான். "ஆண்டவரே உம்முடைய அரசில் வரும்போது என்னை நினைத்தருளும்" என்று செபித்த செபம் அவனை கிறிஸ்துவோடு இணைத்தது. ஆண்டவரின் இரட்சிப்பை மட்டுமல்ல, பரலோக வாழ்வையும் பெற்றுத் தந்தது.

ஆம், இன்று உலகிற்கு இன்றியமையாதது செபம்தான். குடும்பங்களை ஒன்று சேர்த்து அன்பினாலும் ஒற்றுமையினாலும் கட்டியெழுப்புவது திருச்சபையில் எழுப்புதலை உருவாக்கும் வழி. கத்தோலிக்க கிறிஸ்தவர்களைப் பிற கிறிஸ்தவர்களிடமிருந்து இறை அன்னை பக்தியும், செபமாலை செபிப்பதும்தான் தனிமைப்படுத்திக் காட்டுகின்றன.

செபமாலை சொல்வது மனோதத்துவ முறையில் மிகச் சிறந்த செபவழியாகும். உள்ளம், விரல்கள், உதடு, சிந்தனைகளை ஒன்றுபடுத்தி ஒன்றுபட்ட ஆற்றலை உருவாக்கும் சக்திதான் செபமாலை. சொல்வதற்கு எளிது பாமர மக்களும் படிப்பறிவற்ற ஏழையும், பக்தியுடன் மூழ்கும் பரிசுத்தமான வழிபாடுகளில் ஒன்று தான் செபமாலை. அதிக நேரம் ஆலயங்களிலும், இல்லங்களிலும் செபிக்கப்படும் ஒரே செபம் செபமாலை. அன்று முதல் இன்று வரை மத இன வேறுபாடின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தனி செபமாகவும் பொது செபமாகவும் குடும்ப செபமாகவும் சொல்லப்படும் ஒரே செபம் செபமாலை.

செபமாலையை முதன் முதலில் செபித்தவர் மரியன்னைதான். ஏனெனில் கபிரியேல் அதிதூதர் மரியாளுக்குச் சொன்ன மங்கள வாழ்த்துச் செய்தியின் உட்பொருளை உடனே முழுதும் அவரால் புரிந்துக்கொள்ள இயலவில்லை. இருப்பினும் இவ்வாழ்த்து எத்தகையதோ என்று அவர் எண்ணிக் கொண்டிருந்தார் (லூக் 1:28). ஆனால் போகப் போக வானத்தூதரின் வாழ்த்துரைகளை மனதில் அசைபோட்டு மீண்டும் மீண்டும் சொல்லி தியானித்திருப்பார். அதுவே ஓர் செபம்.

"அருள் மிக பெற்றவரே வாழ்க, ஆண்டவர் உம்முடனே" (லூக் 1:28) என்ற வானத்தூதர் வழியாய் கடவுள் வாழ்த்துரையும், பெண்களுக்குள் நீர் ஆசிர்பெற்றவர், உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசிபெற்றதே" (லூக் 1:42) என்ற எலிசபெத்தின் வாழ்த்துரையும் விண்ணப்பமும், "புனித மரியே, இறைவனின் மாதாவே பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண வேளையிலும் வேண்டிக்கொள்ளும்". இங்கே இறைத் தந்தை வாழ்த்துரையை தொடருகிறார். திருச்சபை அவ்வாழ்த்துரையை ஒரு பரிந்துரை விண்ணப்பத்தோடு முடித்து வைக்கிறது.

செபமாலையில் நாம் ஆண்டவரின் மறைபொருளை நினைவு கூறுகிறோம். நற்செய்தியின் வரிகளை செபமாக்கி ஆண்டவரைப் போற்றுகிறோம். நற்செய்தியை வாசிக்க இயலா அந்தக் காலத்தில் நற்செய்தியை வாசிக்க நேரமில்லா, மனமில்லா இக்காலத்தில் அருள் நிறைந்த மரியே வாழ்க, பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே என்கிற செபங்கள் நமக்கு மிக உதவியாக இருக்கின்றன. அதோடு இறைமகன் இயேசுவின் மறைபொருளை தியானிக்கவும், நற்செய்தியில் ஆண்டவர், கபிரியேல் தூதர் வழியாகச் சொன்ன வாழ்த்துக் கூற்றுகளை சொல்லவும், செபிக்கவும் நாம் கொடுத்து வைத்தவர்கள்.

1213ல் பிரான்ஸ் நாட்டில் ஆல்பிஜென்சியன் (Albigensian) என்ற தப்பரை கொள்கையாளர்களை எதிர்த்து செபமாலை செபித்ததன் மூலம் "மியூரே" (Muret) என்ற இடத்தில் நடந்த போரில் வெற்றி கிடைத்தது. இதனைத் தொடர்ந்து செபமாலை பக்தி 1214ம் ஆண்டு புனித சாமிநாதர் என்பவரால் ஏற்படுத்தப்பட்டு 1460ம் ஆண்டு அருளாளர் ஆலன் ரோச் என்பவரால் வளர்த்தெடுக்கப்பட்டது. துவக்கத்தில் இது இயேசு மரியின் சங்கீதமாலை என்று அழைக்கப்பட்டது. ஏனெனில் சங்கீதங்கள் 150 போலவே செபமாலையிலும் 150 முறை அருள் நிறைந்த மரியே என்ற செபம் வருகிறது.

தாவீதின் சங்கீதங்களைப் போலும், ஏன் அதைவிட மேலாகவும் இதனைக் கொள்ளலாம். ஏனெனில், அருள் நிறைந்த மரியே என்ற செபம் வானத்தூதரின் வார்த்தையைக் கொண்டது. அது இயேசு மனுவான மறைபொருளை வெளிப்படுத்துகிறது. சங்கீதங்கள் இயேசுவை முன்னறிவித்தன. வளைகுடா பகுதியில் சுல்தான்களுக்கு எதிராக நடந்தப் போரில், செபமாலை செபித்ததின் வெற்றி அன்னை விழாவாக அறிவித்தார். திருத்தந்தை 13ம் கிரகோரியார், இந்த வெற்றி போர் புரிந்து கிடைத்த வெற்றியல்ல. செபமாலைக்குக் கிடைத்த வெற்றி என்பதால், "செபமாலை அன்னை" விழாவாக அந்த நாளைக் கொண்டாடச் செய்தார்.

இத்தகு பெருமையுடைய, சிறப்புடைய செபமாலையை அன்னை மரியாளே செபிக்கச் சொன்னாள். பிரான்சு நாட்டில் லூர்து நகரில் பெர்னதெத் என்ற சிறுமிக்கு 1858ம் ஆண்டு காட்சியளித்த போதெல்லாம் பளபளக்கும் செபமாலையைக் கையில் வைத்துக்கொண்டு ஒவ்வொரு மணியையும் நகர்த்தியவராய், செபமாலை செபித்துக்கொண்டிருந்தவர்களை உற்சாகப்படுத்தினார்.

போர்த்துக்கல் நாட்டில், பாத்திமா என்ற இடத்தில் லூசியா, பிரான்சிஸ், ஜெசிந்தா என்ற மூன்று சிறுவர்களுக்கு 1919ல் மே முதல் அக்டோபர் வரை ஒவ்வொரு மாதமும் காட்சியருளினார். ஒவ்வொரு காட்சியிலும் அவர் சொன்ன மையச் செய்தி, செபமாலையை ஒவ்வொரு நாளும் செபியுங்கள். கடைசி ஆயுதம் செபமாலைதான். தனியாகவும், கூட்டாகவும், செபமாலையைக் கொண்டு போராடுங்கள் என்பதுதான். இப்படி நாமே செபமாலையின் பெண்மணி என்று பாத்திமாவில் 13.10.1917ல் வெளிப்படுத்தினார், அதையே பரிந்துரைத்தார்.

நம் அன்னையின் பரிந்துரைப்படி செபமாலையை பக்தியுடனும் விசுவாசத்துடனும் முழு உள்ளத்தோடும் செபிப்போம். இச்செபமாலை வழியாய், நாம் மீட்புத்திட்டத்தில் பங்குபெறுவோம். நிறைவான இறையருளைப் பெறுவோம். இயேசுவின் ஒவ்வொரு மறைபொருளையும் ஆழமாக தியானித்து, அறிந்து, அம்மறைபொருளில் நாமும் இடம் பெறுவோம். கிறிஸ்துவ விசுவாச வாழ்வில் நீதி, உண்மை, நேர்மை, சமத்துவம், சகோதரத்துவம், இரக்கம் எனும் இறையாட்சியின் மதிப்பீடுகளோடு, நம் விசுவாச வாழ்வை இணைத்து செபிப்போம்.

ஐம்புலன் அறிவு மிருக வாழ்வைத் தருகிறது. ஆறறிவு மனிதனின் அறிவு வாழ்வைத் தருகிறது. விசுவாசம், முடிவில்லா வாழ்வைத் தருகிறது. எனவே விசுவாசத்தோடு தூய ஆவியால் வழிநடத்தப்படும் புனிதர்களால் அன்பு செய்யப்படும் திருச்சபையால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மரியாளுடன் அமர்ந்து இயேசுவை தியானிக்கச் செய்யும் செபமாலையை ஒவ்வொரு நாளும் குடும்பமாய், இறை நம்பிக்கையில் வாழ வளர இறைவன் தந்த உறவில் வளர வாழ, நாம் செபிப்போம். வாழ்வை வளமாக்குவோம், வாழ்வை கொண்டாடுவோம், வாழ்வை புனிதப்படுத்துவோம். செபமாலை விசுவாசத்தில் கிறிஸ்துவ விசுவாசத்தில் வளர்வோம்.

## 4. புனித பிரான்சிஸ் அசிசியார் இன்றைய உலகிற்கு தரும் பாடங்கள்

திரு. பி. விக்டர்

நமது கத்தோலிக்க திருச்சபையின் புனிதர்களில் மாபெரும் புனிதராக மதிக்கப்படுகிறவர் புனித பிரான்சிஸ் அசிசியார் ஆவார். ஆண்களுக்கான துறவற சபையையும், பெண்களுக்கான துறவற சபையையும் பொதுநிலையருக்கான மூன்றாம் சபையையும் தோற்றுவித்து திருச்சபையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினார். மிகப்பெரும் செல்வந்தரின் மகனாகப் பிறந்தாலும், ஏழ்மையையும் ஏழைகளையும் நேசிக்கிறவராக மாறினார். எளியவர்களில் ஒருவராக தன்னை மாற்றிக்கொண்டு இயேசுவுக்கு பணிசெய்யும்படி புறப்பட்டார். இயேசுவைப் போலவே 12 சீடர்களை ஏற்படுத்திக்கொண்டு பணியாற்ற ஆரம்பித்தார். அசிசியார் வாழ்ந்த அக்காலத்து சூழலை ஆராயும்போது அசிசி நகரில் மனித மாண்பை சீரழிக்கும் ஏற்றத்தாழ்வுகள், பிரிவினைகள், போர்கள், வன்முறை, கலவரம் போன்றவைகளால் நிறைந்திருக்கக் காண்கிறோம். நீதி, அன்பு, பகிர்வு, அமைதி, இறைநம்பிக்கை, தூய அறநெறி போன்ற நற்செய்தியின் மதிப்பீடுகள் மறைந்துக் கொண்டிருக்கின்றன. திருச்சபையின் "இருண்ட காலம்" என்றழைக்கப்பட்ட அந்த காலத்தில் பரிசுத்த ஆவியானவரால் தடுத்து ஆட்கொள்ளப்படுகிறார் புனித அசிசியார். அவர் "மறுகிறிஸ்துவாக" அமைதியின் தூதுவராக வாழ்ந்து அவரது வாழ்வின்மூலம் திருச்சபையில் ஒரு திருப்புமுனை ஏற்படச் செய்கிறார்.

புனித அசிசியார் உலகத்திலே வாழ்ந்தாலும் கடவுளின் அன்பு எப்படிப்பட்டது என்ற விழிப்புணர்வு கொண்டிருந்தார். மனித உணர்வுகளைப் புரிந்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளவராய் இருந்தார். நீண்ட நேரம் ஆண்டவரோடு விழித்திருந்து இறைவேண்டல் செய்தார். அப்படி இறைவேண்டல் செய்யும்போது இறைவனிடம் பெற்ற அனுபவங்கள் அவர் வாழ்வை மாற்றியது. இந்த மனமாற்றம் ஐந்து நிலைகளில் நடந்தேறியது. இவரது மனமாற்றத்தில் இந்த ஐந்து நிலைகளும் நமக்கு பாடமாக அமைகிறது.

"நீ தலைவருக்குப் பணிவிடை செய், ஏனெனில் என் வழியாக உனது சாட்சி அருள்வாழ்வின் நிறைவை அடையும்" என்ற ஆண்டவரின் குரலைக்கேட்டு தன் வாழ்வின் பாதையை மாற்றினார். இறைவனது குரலைக் கூர்ந்து கேட்டது அவரது புது வாழ்வின் தொடக்கமாக இருந்தது. இந்த முதல்நிலை அனுபவம் தனது சகோதரர்களின் வாழ்வில் ஒவ்வொரு நாளும் நிகழவேண்டும் என்று தூய அசிசியார் விரும்பினார். இறைவனின் குரலைக்கேட்டு புதுவாழ்வைத் துவங்கிய அசிசியார் ஏழைகளுக்கும், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் தொழுநோயாளருக்கும் பணிவிடை புரிய ஆரம்பித்தார். அவர்களில் துன்புறும் இயேசுவைக் கண்டார். "தான்" என்ற அகந்தை அழிந்து சுயநலத்திலிருந்து மீண்டது அவரது அருள்வாழ்வின் இரண்டாம் நிலை ஆகும். துன்புறும் மனிதரில் இயேசுவைக்காணும் இந்த சிந்தைதான் அன்னை தெரேசாவைக் கவர்ந்து அவரை இன்று புனிதராக மாற்றியிருக்கிறது. சின்னஞ்சிறிய இச்சகோதரருக்குச் செய்வதெல்லாம் எனக்கே செய்தீர்கள் (மத் 25:40) என்று இயேசு மொழிந்த இறைவார்த்தையை வாழ்வாக்கியவர் தூய அசிசியார்.

இறைவனது வார்த்தையைக் கேட்டு தனது புது வாழ்வைத் துவங்கிய அசிசியார் துன்புறும் மனிதரில் இயேசுவைக் காணத்துவங்கியவர் இறைவனது குரலுக்குப் பணிந்து விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்று உறுதிகொண்டு அதற்காக எல்லாவற்றையும் இழப்பதற்கு தயாரானது அவரது அருள் வாழ்வின் மூன்றாம் நிலை. பெரும் செல்வந்தராக

இருந்தும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் இயேசுவுக்காக எல்லாவற்றையும் துறந்தார். இவரது மாற்றத்தைப் பிடிக்காத அவரது தந்தையார் இவர் உடுத்தியிருந்த விலையுயர்ந்த உடையைப்பற்றி கேள்வி எழுப்பியபோது தான் உடுத்தியிருந்த தந்தையின் உடைகளையும், செருப்பையும் களைந்துவிட்டு நிர்வாணமாக நின்றார். இதனால் தந்தையின் உறவையும், இழந்தார். அசிசியாரின் வார்த்தையும் செயலும் இணைந்து சென்றது. அவர் உலகப் பொருட்களை விடுத்து இறைவனின் விருப்பத்தை ஏற்றது அவரது அருள் வாழ்வின் நான்காம் நிலையாகும்.

இறைவேண்டலின் மூலம் தன்னைக்குறித்த இறைவனின் திட்டத்தை அறிந்தவராய் "இறைவார்த்தை என்னில் நிறைவேற வல்லமை தாரும்" என்று செபித்தார். தானே உருவாக்கிய எளிய தவ உடையில் முதுகுப்புறத்தில் சுண்ணாம்பால் சிலுவை அடையாளம் வரைந்துக்கொண்டு இறையாட்சி நற்செய்தியை அறிவிக்கத்துவங்கினார். சிலுவை தனக்குப் பாதுகாப்பு எனவும், தாம் இறை இயேசுவின் போர் வீரன் எனவும் சான்று பகர இவ்வாறு செய்தார். கிறிஸ்துவின் வாழ்வின் பாணியை ஏற்றுக்கொண்டது அவரது அருள்வாழ்வின் ஐந்தாம் நிலை.

இவ்விதமாக மேற்கூறப்பட்ட ஐந்து நிலைகளில் தனது அருள்வாழ்வை அமைத்துக்கொண்ட தூய அசிசியார் இவ்வுலகப் போக்கிலிருந்து விடுபட்டு நற்செய்தியை வாழ்வாக்குவதில் ஆர்வமாயிருந்தார். சரியான சூழலுக்கேற்ப இறைவார்த்தையைப் புரிந்துக்கொண்டு அதைத் தன் வாழ்வாக்கிக்கொண்டு தன் சகோதரர்களையும் இறைவார்த்தையை வாழ்வாக்க அழைப்பு விடுத்தார். அவரது நோக்கம் நற்செய்தியை வாழ்ந்து காட்டுவதுதான். அமைதியை ஏற்படுத்துவதில் நமது அசிசியார் இயேசுவின் பாணியைப் பின்பற்றி அமைதியின் செய்தியாளராகவும், அமைதியை ஏற்படுத்துகிறவராகவும், கடவுளின் பிள்ளையாகவும் விளங்கினார். இதனால்தான் நமது தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அசிசியாரைப் பின்பற்றி அவரது அமைதியை உலகெங்கும் பரப்புவதற்காக அவரது பெயரைத் தனதாக்கிக்கொண்டார். தனது பயணங்கள் மூலமாக கடிதங்கள் மூலமாக, பிரசங்கங்கள் மூலமாக தனது அன்றாட செயல்கள் மூலமாக இறை அசிசியராக, இன்றைய "அமைதியின் தூதுவராக" செயல்பட்டு வருகிறார்.

நற்கருணைமீது அசிசியார் கொண்டிருந்த பக்தி அளவிடமுடியாது. திருப்பலியில் நற்கருணையைப் பெற்றவுடன் பரவசத்தில் ஆழ்ந்து விடுவார். நாம் களைத்திருக்கலாம், மனச்சோர்வு தனிமை இவற்றில் சிக்கித் தவிக்கலாம். அச்சமயங்களில் நற்கருணை பேழையின்முன் அமைதியாக அமர்ந்திருந்து அமைதியில் தியானிப்பது மிகுந்த பயன் தரும் என்று புனித அசிசியார் கூறுவார். நற்கருணையே ஆக்கமும், ஊக்கமும் தரவல்லது. இதன் துணையின்றி நான் என் பணியைத் தொடர்ந்து செய்ய இயலாது என்று அசிசியார் கூறுவார். அன்னை தெரேசாவிடம் செய்தித்தாள் நிருபர்கள் "உங்களுக்கு இப்பணி செய்ய வல்லமை எங்கிருந்து கிடைக்கிறது?" என்று கேட்டனர். அதற்கு அன்னை தெரேசா "தினந்தோறும் ஒருமணி நேரம் நற்கருணையின்முன் முழந்தாளிட்டு இயேசுவைத் தியானிப்பதே இவ்வல்லமையை எனக்குத் தருகிறது" என்றார். இதை நாமும் வாழ்வாக்கிப் பார்க்கலாமே.

சகோதரத்துவமின்றி உலகில் அமைதியை ஏற்படுத்த முடியாது. உலகில் படைக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரும் ஒருவர் மற்றவரைச் சகோதர சகோதரிகளாக அன்பு செய்து வாழ இறைவனால் அழைப்பு பெற்றுள்ளனர். (எபி 13:1). இவ்வழைப்பை அசிசியார் தன் வாழ்வில் முழுமையாக கடைப்பிடித்தார். சகோதர வாழ்வுக்கு கிறிஸ்து அடித்தளமாக இருக்க வேண்டுமென அசிசியார் அடிக்கடி கூறுவார். அசிசியார் நடமாடும் நற்செய்தியாக வாழ்ந்தார். அவரது எடுத்துக்காட்டான வாழ்வாலும் தனது எழுத்துக்களாலும் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். நீங்கள் ஒருவர் மற்றவருக்கு செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்துக்கொள்வர் (யோவா 13:34-35) என்ற இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கிக் காட்டியவர் தூய அசிசியார். நாமும் அசிசியாரைப்போல சகோதரத்துவ வாழ்வு வாழ்வதன்மூலம் உலகில் அமைதியை ஏற்படுத்துவோம்.

சிலுவையில் அறையுண்ட இயேசுவைத் தவிர வேறு எதையும் அறிய வேண்டுமென்று நினைக்கவில்லை (2கொரி 2:2) என்ற தூய பவுலின் நம்பிக்கையால் ஆட்கொள்ளப்பட்ட தூய அசிசியார் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை அறிய சிலுவையின்முன் மண்டியிட்டு இறைவேண்டல் செய்வதில் எல்லையில்லா ஆனந்தம் அடைந்தார். இந்த அனுபவம் அவரை ஒரு புதிய ஒளியை அறிந்து கொள்ளவும் இறை நம்பிக்கையை ஒரு புதிய பார்வையில் அணுகவும் தூண்டியது. தொடர்ந்து அவரது வேண்டுதலால் அவர் விரும்பி கேட்டுக்கொண்டபடி சிலுவையில் இயேசு அனுபவித்த ஐந்து காயங்களை தம் உடலில் பெற்றுக்கொண்டார். இந்த காயங்கள் மிகுந்த வேதனையைக் கொடுத்தாலும் அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு நகரங்கள், கிராமங்கள் தோறும் பயணம் செய்து சிலுவையிலே அறையுண்ட கிறிஸ்துவின்மீது நம்பிக்கைக்கொள்ளத் தூண்டினார். சிலுவையினாலே துன்பங்களிலேயும், சோதனைகளிலேயும், உவகையும், சக்தியும் பெற்று வாழ முடியும் என்பதை தன் வாழ்வின்மூலம் மெய்ப்பித்தார். இந்த சிலுவை தியானம் நமக்கும் சக்தி தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இந்த பூமி இறையன்பின் கொடை. இந்த இயற்கை இறையருளின் கொடை. இந்த வார்த்தைகளை உள்ளூர உணர்ந்து இறைபிரசன்னத்தை இயற்கையில் கண்டு மகிழ்ந்தவர் புனித அசிசியார். அனைத்தும் இறைவனின் படைப்பு என்பதால் மக்கள் அனைவரும் மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள் கூட நமது சகோதர சகோதரிகள் என்று அழைத்து

நேசித்தார். இயற்கையின் அழகை பல தெய்வீக கவிதைகள் இயற்றி பாடி பேரானந்தம் அடைந்தார். பறவைகளும், விலங்குகளும் அவரது பேச்சுக்கு செவிகொடுத்தன. இயற்கையைக் குறித்து அவரது "படைப்புக்களின் கவிதை" இத்தாலிய மொழியில் அவர் இயற்றிய முதல் இலக்கிய படைப்பாகும். அதனால்தான் அவரது பெயரைத் தாங்கிய நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் இயற்கையின்மீது இரக்கம் காட்டுங்கள்" என்று கடிதங்கள் வாயிலாக தெரியப்படுத்தி வருகிறார். புனித அசிசியாரின் திருவிழாவினை அக்டோபர் 4ம் நாளை அகில உலக விலங்குகள் தினமாகவும் உலக சகோதரர் தினமாகவும் சிறப்பிக்கப்படுகிறது. 1223ம் ஆண்டு அசிசியார் ஆரம்பித்துவைத்த "கிறிஸ்துமஸ் குடில்" ஏழ்மையில் பிறந்த இறைவனை இயேசுபாலனை, இயற்கையின் இறைவனை கண்டுக்கொள்ளும் உலக மக்கள் சிறந்த வழியாக அமைந்துள்ளது. இயற்கையைப் போற்றுவோம், அதன் அழகிலே, அமைதியிலே, இறைவனைக் காண்போம், பாதுகாப்போம், பராமரிப்போம்.

**இறுதியாக அசிசியாரின் அமைதி மன்றாட்டு நமது மன்றாட்டாக மாறட்டும்.**

ஓ இறைவா,
அமைதியின் தூதுவனாய் என்னைப் பயன்படுத்தும்
பகையுள்ள இடத்தில் பாசத்தையும்
மன வேதனையுள்ள இடத்தில் சந்தோஷத்தையும்
அவநம்பிக்கையுள்ள இடத்தில் நம்பிக்கையையும்
இருள் சூழ்ந்த இடத்தில் ஒளியையும்
துயரம் நிறைந்த உள்ளத்தில் மகிழ்ச்சியையும்
வழங்கிட எனக்கு அருள்புரியும்
அமைதியின் தூதுவனாக என்னை மாற்றும் ஆமென்.

## 5. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

1. கடந்த இரண்டு ஆண்டுகளில், உலக அளவில் ஆயர்களாக நியமனம் பெற்ற 90க்கும் மேற்பட்ட ஆயர்களை, திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, ஆயருக்கு இருக்க வேண்டிய அயலவர் அருள்பணியாளரே. ஒவ்வோர் அருள்பணியாளரும், தனது ஆயரின் அருகாமையை உணர வேண்டுமென்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறினார். இந்த ஒரு நெருக்கம், குருத்துவக் கல்லூரியிலிருந்தும், குருக்களை உருவாக்கும் பயிற்சியிலிருந்தும் ஆரம்பிக்கப்பட வேண்டும், இந்த ஆரம்பம் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று கூறினார்.

2. அக்டோபர் 16ம் தேதி ஞாயிறு காலை 10.15 மணிக்கு, புனித பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் நடைபெறும் சிறப்புத் திருப்பலியில் அருளாளர்களான Salomone, leclercq, Jose Sanchez del Rio, Manuel Gonzalez Garcia, Lodovico Pavoni, Alfonso Maria Fusco, Jose Gabriel del Rosario Brochero மற்றும் மூவொரு இறைவனின் Elizabeth ஆகிய எழுவரை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனிதர்களாக அறிவிக்கிறார். 1517ம் ஆண்டு, மார்ட்டின் லூத்தர் அவர்கள் கத்தோலிக்கத் திருஅவையிலிருந்து பிரிந்து, Protestant Reformation என்ற அமைப்பை உருவாக்கியதன் 500ம் ஆண்டு துவக்கத்தை , லூத்தரன் சபையினரோடு இணைந்து சிறப்பிக்க அக்டோபர் மாத இறுதி நாளன்றும், நவம்பர் மாத முதல் தேதியன்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுவீடன் நாட்டிற்கு திருத்தூது பயணம் மேற்கொள்ளவிருக்கிறார்.

3. ஜெர்மன் பத்திரிக்கையாளர் Peter Seewald அவர்களுக்கு, திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் வழங்கிய ஒரு நீண்ட நேர்காணல், "இறுதி உரையாடல்கள் (The Last Conversation)" என்ற தலைப்பில், ஒரு நூலாக, ஜெர்மன் மற்றும் இத்தாலிய மொழிகளில், செப்டம்பர் 09, வெளியாகியுள்ளது. திருப்பீடச் சீர்த்திருத்தம், தனது பணி ஓய்வு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பற்றிய எண்ணங்கள், நாத்சி ஆட்சியில் தனது குழந்தைப்பருவம், தனது இறையழைப்பு, போரின் கொடுமைகள், வத்திக்கானில் தனது பணி என, பல்வேறு தலைப்புகள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட். நிர்வாகம் தனக்குரிய வலிமைமிக்க கொடையாக இல்லாவிடினும், அதில் தோல்வியடைந்தவராகத் தன்னை பார்க்க இயலவில்லை என்றும் தான் ஆன்மீகக் கேள்விகள் பற்றி சிந்தித்து தியானிக்கும் ஒரு பேராசிரியர் என்றும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நடைமுறை சீர்த்திருத்தம் செய்யக்கூடிய மனிதர் என்றும் கூறியுள்ளார் திருத்தந்தை 16ம் பெனடிக்ட். ஜோசப் இராட்சிங்கர் அவர்கள் வாழ்வின் பல முக்கியமான கட்டங்கள், இப்புதிய நூலில் வெளியிடப்பட்டுள்ளன. இந்நூல், ஜெர்மன் மொழியில் (Letzte Gesprache) 240 பக்கங்கள் கொண்டுள்ளது. இந்நூலின் ஆங்கில பதிப்பு, வருகின்ற நவம்பரில் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

4. இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் வத்திக்கான் தூய பேதுரு பசிலிக்கா பேராலய புனிதக் கதவின் வழியாக, ஒரு கோடியே ஐம்பது இலட்சத்துக்கு மேற்பட்ட திருப்பயணிகள் சென்றுள்ளனர் என்று திருஅவையின் இக்கால நற்செய்தி அறிவிப்புப்பணிக் குழு அறிவித்துள்ளது. பொதுவாக கோடையின் கடும் வெப்பத்தைத் தவிர்ப்பதற்காக ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பெருமளவான சுற்றுலாப் பயணிகள் உரோம் நகருக்கு வருவதைத் தவிர்ப்பார்கள். ஆனால் இவ்வாண்டு இந்த மாதங்களில் திருப்பயணிகள் இவ்வளவு எண்ணிக்கையில் வந்திருப்பது இரக்கம், அவர்களின் இதயத்தை எவ்வளவு தூரம் தொட்டுள்ளது என்பதையே காட்டுகின்றது என்று தெரிவித்தார் அருள்பணி சில்வா.

5. வருகிற அக்டோபர் 12ம்தேதி உரோம் ஒலிம்பிக் விளையாட்டு அரங்கத்தில் நடைபெறவிருக்கும் அமைதிக்கான கால்பந்து விளையாட்டுக்குத் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். கல்வி மற்றும் சமூக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கத்தில், 'Scholas Occurrentes" என்ற திருஅவையின் முயற்சியினால், அமைதிக்காக ஒன்று சேர்ந்து விளையாடுவோம் என்ற இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

## சுடர் வாசகர் போட்டி 27 முடிவுகள்

1. தந்தை பியோவின் பிரசன்னத்தை நமக்கு உணர்த்தும்
    - நமக்கு ஏற்படப்போகும் ஆபத்தைக் குறித்து எச்சரிக்கும்
    - பாவங்களுக்குப் பரிகாரம் தேடுவோருக்கு பாவப்பரிகாரம் அளிக்கிறது
    - துயருறும் ஆன்மாக்களுக்கு ஆறுதல் அளிக்கிறது
    - ஆன்ம அமைதி நாடி வருவோர்க்கு அழைப்பாக அமைகிறது
2. தூய அன்னை தெரேசா
3. மிக்கேல் - கடவுளுக்கு நிகரானவர்,தீமையை எதிர்ப்பவர்,சாத்தானை தண்டிப்பவர் கபிரியேல் - கடவுளின் ஆற்றல், இறைவனின் வல்லமையை மனிதருக்குத் தெரிவிப்பவர். ரபேல் - கடவுள் குணமாக்கின்றார்
4. பெல்ஜியத்தின் லுவேயின் பல்கலைக் கழகம்
5. கி.பி. 329ஆம் பத்திநாதர்
6. 9ஆம் பத்திநாதர்
7. பாரத் ரத்னா விருது, நோபல் விருது
8. அருட்சகோதரி மேரி பெர்னதெத் கிஸ்போட்டா பிரசாத்
9. கொடிய ஈரல் நோயிலிருந்து
10. பத்திநாதர் என்று பொருள்
11. தூய ஜெரோம்
12. 1621 செப்டம்பர் 17ஆம் நாள்
13. 1667ஆம் ஆண்டு
14. தூய எலன்
15. தூய அன்னை தெரேசா

### அடுத்த சுடரில்
### பகுதி 1

அனைத்து புனிதர் நினைவு
அனைத்து இறந்தோர் நினைவு
தூய சார்லஸ் போரோமியோ
லாத்தரன் பேராலய அர்ச்சிப்பு
திருத்தந்தை லியோ (சிங்கராயர்)
தூய ஆல்பர்ட்
தூய பேதுரு தூய பவுல் பேராலயங்கள் அர்ச்சிப்பு
கிறிஸ்து அரசர் பெருவிழா (இறைஇரக்க ஆண்டின் நிறைவு)
மரியாள் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட விழா
தூய செசிலியம்மாள்
தூய அந்திரேயா திருத்தூதர்
பொதுக்கால ஞாயிறுகள்
திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

### பகுதி - 2

இறை இரக்கத்தின் ஆண்டு நிறைவு நமக்குத் தரும் சவால்கள்
திருவருகைக் காலம் - தயாரிப்புக்களும் சவால்களும்
புனிதர்கள் பலவிதம் ஒவ்வொருவரும் ஒருவிதம்
இறந்தோர்க்காக செபிக்கும் ஆன்மீகம் - ஒரு புரிதல்

# செபமாலை பக்தி ஓர் பார்வை

திரு. ஹென்றி ஸ்டீபன்

**திருத்தந்தையர்களின் ஒருசில கருத்துக்கள்**

- அன்னை மரியாவுக்கென்று திருச்சபையால் அங்கிகரிக்கப்பட்ட அநேக பக்தி முயற்சிகளில், செபமாலை அளவிற்கு வேறெதும் புதுமைகளையும் அற்புதங்களையும் பெற்றுத் தரவில்லை. (திருத்தந்தை 9ம் பத்திநாதர்)
- ஆண்டவரிடமிருந்து நமக்கு வரங்களைப்பெற்று தரும். மரியாவுக்கு சொல்லப்படும் செபங்களிலேயே அழகானதும், வளமையானதும், செபமாலையே. அது கடவுளின் தாய் மரியாவின் உள்ளத்தைத் தொடும் செபம். தினமும் செபமாலை சொல்லுங்கள். (திருத்தந்தை 10ம் பத்திநாதர்)
- அன்னை மரியாவுக்கென்று திருச்சபையால் அங்கிகரிக்கப்பட்ட அநேக பக்தி முயற்சிகளில் செபமாலை அளவிற்கு வேறெதும் புதுமைகளையும் அற்புதங்களையும் பெற்றுத்தரவில்லை. (திருத்தந்தை 9ம் பத்திநாதர்)
- செபிப்பதற்கும் தியானிப்பதற்கும் உகந்த மிகச்சிறந்த உபகரணம் செபமாலை. (திருத்தந்தை 6ம் சின்னப்பர்)
- பல வேலைகளில் சுமைகளும், உழைப்பின் களைப்பும் இருந்தாலும் செபமாலை சொல்லாமல் ஒருநாள் கூட உங்கள் வாழ்வு கடந்துவிட வேண்டாம். (திருத்தந்தை 11ம் பத்திநாதர்)

**சிந்திப்போம்: செபமாலைப்பற்றி ஒருசில கேள்விகள்**

1. நீங்கள் தினமும் செபமாலை சொல்லும் பழக்கமுள்ளவரா?
2. செபமாலை என்றால் என்ன?
3. செபமாலை சொல்லும் பழக்கத்தை எத்தனை ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகிறீர்கள்?
4. உங்கள் குடும்பங்களில் செபமாலை சொல்லும் வழக்கம் உண்டா? தினமும்/வாரத்தில் சில நாட்கள்
5. போகும்போதும் வரும்போதும் எப்போதும் செபமாலையை உங்களிடத்தில் வைத்திருக்கிறீர்களா?

**1. செபமாலை என்றால் என்ன?**

1. இது ஒரு அனுதின உணவு
2. அருள் வரங்களை பெற்று தரும்
3. 20 மறையுண்மைகளை செபமாலை மூலம் சிந்திக்க செய்கிறது
4. நும் வாழ்விற்கான சக்தியும், நிலைவாழ்வுக்கு வழியும் தருவது

5. கடவுளோடு உறவு கொள்ள உதவும் கருவி
6. அன்னை மரியாவை மகிமைப்படுத்துவதற்கான சாதனம்
7. அன்பின் அடையாளம்
8. அற்புதத்தின் அடையாளம்
9. தீய சக்திகளிலிருந்து பாதுகாக்கும் பாதுகாப்பு வளையம்
10. அன்னை மரியா நமக்கு கொடுத்த மேலான பொக்கிஷம் (சொத்து)

## 2. செபமாலை செபிப்பதன் பயன்கள்?

1. விசுவாசத்தில் வளர முடிகிறது
2. ஆன்ம திருப்தி ஏற்படுகிறது
3. மன அமைதி கிடைக்கிறது
4. கேட்கின்ற வரங்கள் கிடைக்கிறது
5. அன்னை மரியாவின் பரிந்துரையில் நம்பிக்கை வைக்க உதவுகிறது
6. நற்பழக்கங்கள் பெருகுகிறது
7. செபிப்பதால் பாவத்தை உணர முடிகிறது
8. குடும்பத்தில் செபிப்பதன்மூலம் சமாதானம், அமைதி, சந்தோஷம் பெருகுகிறது
9. பல்வேறு பிரச்சனைகளிலிருந்து விடுதலைக் கிடைக்கிறது
10. நம்முடைய வியாதிகள், வருத்தங்கள், தயக்கங்கள் போன்றவை நீங்கி அற்புதங்கள் நிகழ்வதை உணர முடிகிறது

## 3. செபமாலை செபிக்காத நாட்களில் நிகழ்வன:

சோதனைகள் வரும்
குழப்பமான சூழ்நிலை ஏற்படும்
சோம்பேறித்தனமாக இருக்கும்
அமைதியிழந்து காணப்படும்
மனஉறுத்தல் ஏற்படும்
குடும்பத்தில் சிறுசிறு பிரச்சனைகள் வரும்
எதிர்பாராத காரியங்கள் தள்ளிப்போகும்
இரவில் நல்ல தூக்கமின்மை
இறைபக்தியிலும் நாளடைவில் குறைய வாய்ப்பு ஏற்படும்
அன்னை மரியாவின் பக்தி குறைவதோடு அற்புதங்களையும் பாதுகாப்பையும் இழந்து விடும் சூழ்நிலை ஏற்படும்.

## 4. செபமாலை செபிக்காதவர்களுக்கு கூறும் அறிவுரை:

1. செபமாலை செபிப்பதால் நல்லதே நடக்கும்
2. செபமாலை செபித்தால் ஆபத்து, விபத்திலிருந்து காப்பாற்ற உதவும்
3. பாவ பழக்கத்திலிருந்து விடுப்பட்டு இறையன்பில் வளர செபமாலை ஓர் அருமருந்து
4. செபமாலை செபித்தால் கேட்கும் வரங்கள் கிடைக்கும்
5. செபமாலை செபிக்கும் பழக்கத்தை மறந்தால் அற்புதங்களையும் அதிசயங்களையும் உணர முடியாது
6. அனுதினமும் செபமாலை ஏந்தி செபிக்காதவர் வாழ்க்கை இருள் சூழ்ந்ததாக தோன்றும்
7. குடும்பத்தில் அன்பு, சமாதானம் கிடைக்க செபமாலை செபிக்க வேண்டும்
8. செபமாலை செபிக்கவில்லையென்றால் வாழ்க்கை பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு தள்ளப்படும்
9. செபமாலையை செபிக்க மறந்துவிட்டால் ஒரு நல்ல கத்தோலிக்க கிறிஸ்துவன்/ள் என்று சொல்லிக் கொள்ளவே தயக்கம் ஏற்படும்
10. இயேசு ஆண்டவரும் அன்னை மரியாவும் என்றும் துணையாகவும் இருந்து விசுவாசத்தில் வளரவும் வேண்டுமென்றால் தினந்தோறும் செபமாலையை பக்தியுடன் செபித்து பலன்பெற வேண்டும்.

**செபமாலையை பக்தியுடன் செபிக்கின்றவர்களுக்கு 1214ம் ஆண்டு அன்னை மரியா புனித தோமினிக், முக்தி மற்றும் ஆலன் வழியாக அருளும் 15 வாக்குறுதிகள்:**

1. என் செபமாலையை அன்புடன் செபித்து வருபவர்களுக்கு என் தனிப்பட்ட பாதுகாப்பையும், அருள் வரங்களையும் அளிப்பேன்.

2. செபமாலையைத் தொடர்ந்து செபிப்பவர்கள் சில சிறப்பான வரங்களை என்னிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள்.

3. என் செபமாலை நரகத்திற்கு எதிரான வலிமையுள்ள கேடயமாக இருக்கும். தீயப்பழக்கங்களை அழிக்கும் பாவங்களிலிருந்து விடுவிக்கும் தப்பறைகளை ஒழிக்கும்.

4. செபமாலை புண்ணியங்களையும் நற்கிரியைகளையும் வளர்க்கும். ஆன்மாக்களுக்கு ஏராளமான இறை இரக்கத்தைப் பெற்றுத் தரும். உலகப்பற்றுள்ள ஆன்மாக்கள் கடவுளை அன்பு செலுத்த செய்யும். ஆன்மாக்கள் விண்ணக நித்திய

நன்மைகளை விரும்பும்படி அவர்களை உயர்த்தும் செபமாலையில் ஆன்மாக்கள் தங்களை புனிதப்படுத்திக் கொள்ள மிகவும் விரும்புகிறேன்.

5. செபமாலை செபித்துக் கொண்டு தன்னையே என்னிடம் அர்ப்பணிக்கும் ஆன்மா என்றும் அழிவு பெறாது.
6. செபமாலையின் தேவ இரகசியங்களைத் தியானித்துப் பக்தி உருக்கத்துடன் செபமாலை செபிப்பவரை துர்ப்பாக்கியம் மேற்கொள்ளாது. இறைவன் அவரைத் தண்டிக்க மாட்டார். அகால மரணத்திற்கு ஆளாக மாட்டார். அருள் நிலையில் வாழ்ந்து விண்ணக வாழ்விற்குத் தகுதி பெறுவர்.
7. செபமாலையின்போது உண்மையான பக்தியுள்ளவர் திருச்சபையின் திருவருட்சாதனங்களைப் பெறாமல் சாகார்.
8. செபமாலை பிரமாணிக்கத்துடன் செய்து வருபவர் இவ்வுலக வாழ்விலும், மரண வேளையிலும், இறைவனின் ஒளியையும், அவரது திருவருளின் பெருக்கத்தையும் அடைவர். மரண வேளையில் விண்ணகத்தில் புனிதர் அனுபவிக்கும் பேரின்பத்திலும் பங்கு பெறுவர்.
9. செபமாலையின்மீது பக்தியுள்ள ஆன்மாக்களை உத்தரிப்புஸ்தல வேதனையிலிருந்து மீட்பேன்.
10. செபமாலையைப் பிரமாணிக்கத்துடன் செபிக்கும் ஆன்மாக்கள் விண்ணகத்தில் சிறப்பான மகிமையை அடைவர்.
11. செபமாலை செபித்து அதன் வழியாக நீங்கள் கேட்பதெல்லாம் பெற்றுக்கொள்வீர்கள்.
12. செபமாலை பக்தியைப் பரப்புபவருக்கு அவர் வாழ்நாளிலும், மரண வேளையிலும் வானக நீதிமன்றத்தில் அவருக்காகப் பரிந்து பேச என் தெய்வத் திருமகளிடமிருந்து உத்தரவு பெற்றுள்ளேன்.
13. செபமாலை செபிக்கும் அனைவரும் என் பிள்ளைகள் என் ஒரே மகன் இயேசுவின் சகோதர சகோதரிகள்.
14. செபமாலை பக்தி நிலைவாழ்வின் முன் அறிகுறி திரும்பத் திரும்ப அருள் நிறைந்த செபத்தை செபித்தாலும் நமது சிந்தனையெல்லாம் நமதாண்டவர் இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, பாடுகள், இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவி, மரியன்னை மகத்துவம் பெற்றது என்பனவற்றைப் பற்றியே இருக்கிறது என்பதுதான் இந்த பக்தியின் சாரம்.
15. இந்த பக்தியின் மூலம் நாம் இறை இயேசுவுடன் தூய ஆவி மற்றும் மரியன்னையுடனும் உறவு கொண்டு அதில் முன்னேற்றம் அடைகின்றோம் என்கிறார் திருத்தந்தை 12ம் பத்திநாதர். மேலும் செபமாலை பக்தி முயற்சியில் நாம் பங்கேற்கும்போது மரியன்னையின் அரவணைப்பில் நாமிருக்கிறோம் என்ற நம்பிக்கை நம்மில் இருக்க வேண்டும். எனவே மரியாவின் இறை வாழ்க்கைப் பாதையில் நாமும் வாழ்வோம் என உறுதியளித்து பக்தியுடன் இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.